பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 25 வியாழக்கிழமை (10.08.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 255

# மூதூர் கிழக்கில் நிர்க்கதி நிலையில் 30 ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள்!

## தொடரும் அகோர ஷெல், விமானக் குண்டுவீச்சுகள் பொருளாதாரத் தடை என்பவற்றால் அங்கு பேரவலம்

திருகோணமலை, ஓகஸ்ட் 10

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசங்கள் மீது கடந்த சிலவாரங்களாக அரசுப் படைகள் தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல்களால் அந்தப் பகுதிகளில் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை சீர்குலைந்து பெரும் மனித அவலம் உருவாகியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

வான் வழிக் குண்டு வீச்சுகள், அகோர ஷெல் தாக்குதல்கள் மற்றும் வலிந்த படை நகர்வுகளால் மூதூர் கிழக்கு மற்றும் ஈச்சிலம்பற்றுப் பகுதிகளில் வீதிகள், பாலங்கள் உட்பட உட்கட்டுமானங்கள் தகர்ந்து, அழிந்து போயிருக்கின்றன. இதனால், சுமார் 30ஆயிரம் தமிழ்க் குடும்பங்கள் உள்ளூர இடம் பெயர்ந்து அந்தரிக்கும் அவல நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களில் நடத்தப்பட்டுவரும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களால் அங்கு பெருந்தெருக்கள், பாலங்கள் போன்ற உட்கட்டமைப்பு கள் சிதைவுண்டு போயிருக்கின்றன.

புலிகளின் நிர்வாகப் பிரதேசங்களான மூதூர் கிழக்கு நிலப்பரப்பையும், ஈச்சிலம்பற்றையும் தொடுக்கும் இலங்கைத் துறை முகத்துவாரம் பாலம் விமானக் குண்டுவீச்சினால் முற்றாக அழிவுற்றுள்ளது.

வீதிகள், பாலங்கள் தகர்ந்து போனதால் உள்ளூரில் பொதுமக்களுக்கான உணவு மற்றும் மனிதாபிமான நிவாரண உதவிகளை வழங்கும் தொண்டு நிறுவனங்களின் பணிகள் தடைப்பட்டுப் போயிருக்கின்றன.

**அடிக்கடி இடப்பெயர்வு**

ஏப்ரல் 25 ஆம் திகதி கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா படுகாயமடைந்த சம்பவத்தையடுத்து விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசமான மூதூர் கிழக்கு தமிழ்க் கிராமங்கள் மீது அரசபடைகள் தாக்குதல்களை ஆரம்பித்தன.

வான், கடல், தரை வழியாக நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்களால் மூதூர் கிழக்கில் வசித்த பெரும் எண்ணிக்கையான குடும்பங்கள் வீடு வாசல்களை விட்டு இடம் பெயர்ந்து ஈச்சிலம்பற்றுப் பகுதிக்கு நகர்ந்தன.

அதன் பின்னர் தினமும் அங்கு மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சுக்களால் ஏற்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிங்ரன் அனுதாபம்

நியூயோர்க், ஓக.10

பட்டினிக்கெதிரான நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்கள் 17 பேர் திருகோணமலையில் படுகொலை செய்யப்பட்டதை அமெரிக்காவின் முன்னாள் அதிபர் பில்கி[illegible]ங்ரன் கடுமையாகக் கண்டித்துள்ளார். [illegible] அதிர்ச்சியையும் தெரிவித்துள்ளார்.

"இலங்கையின் கிழக்கு [illegible]தியில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்க[illegible] உதவிகளை வழங்கி வந்த பணியாளர்க[illegible] கால்ல[illegible]பட்டமை எனக்கு அதிர்ச்சியைய[illegible] விசனத்தை

(16ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த மக்கள் மீது விமானத்தாக்கு: ஐவர் பலி!

கொழும்பு, ஓக. 10

இடம் பெயர்ந்துகொண்டிருந்த பொதுமக்கள் ஐவர் வெருகல் பகுதியில் நேற்று மாலை விமானக் குண்டுவீச்சில் சிக்கி உயிரிழந்திருக்கின்றனர்.

மூதூர் மற்றும் ஈச்சிலம்பற்றுப் பகுதிகள் மீது நடத்தப்பட்டுவரும் ஷெல் வீச்சுகளுக்கு அஞ்சி உயிரைக் கையில் பிடித்தபடி அங்கி

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'அம்புலன்ஸ்' மீது கிளைமோர்த் தாக்குதல் நெடுங்கேணியில் டாக்டர் உட்பட ஐவர் பலி!

### ஊடுருவும் படையினர் கைவரிசை

புளியங்குளம், ஓக.10

வவுனியா வடக்கு நெடுங்கேணி சுற்றயல்கூறு மருத்துவமனைக்குச் சொந்தமான 'அம்புலன்ஸ்' வாகனம் மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டதில் மருத்துவர் அவரது மனைவி மற்றும் தாதியர்கள் இருவர் உட்பட ஐவர் உயிரிழந்திருக்கின்றனர்.

இந்தக் கொடூரச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் நெடுங்கேணி யில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பண்டாரக்குளம் என்னும் இடத்தில் இடம்பெற்றிருக்கிறது.

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணி யினரால் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலிலேயே 'அம்புலன்ஸ்' சிக்கியது.

(16ஆம் பக்கம் பார்க்க)



## நைனாமடுவிலும் கிளைமோர் மருத்துவர் உயிர் தப்பினார்

வவுனியா,ஓக.10

வவுனியாவில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசத்தில் மற்றொரு கிளைமோர் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவைச் சேர்ந்த பெண் மருத்துவர் ஒருவர் அதிஷ்ட வசமாக உயிர் தப்பியுள்ளார். அவரது வாகனம் பலத்த சேதமடைந்தது.

வவுனியா வடக்கு நைனாமடுப் பகுதியிலேயே இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினர் இந்த இரண்டாவது தாக்குதலை நடத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சுகளில் இந்தியா நேரடியாகத் தலையிடமாட்டாது!

### எனினும் இருதரப்புக்கும் அழுத்தம் கொடுத்துவருகிறது; கருணாநிதியிடம் பாதுகாப்பு ஆலோசகர் நேரில் தெரிவிப்பு

சென்னை, ஓக.10

இலங்கையில் அரசு மற்றும் விடுதலைப் புலிகளுக்கு இடையே நடைபெறும் சமாதானப் பேச்சுகளில் இந்தியா ஒருபோதும் நேரடியாகத் தலையிடாது. ஆனாலும் பிணக்கில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுக்கும் எல்லாவகையிலும் அழுத்தங்களைக் கொடுத்து வருகிறது.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இந்தியாவின் தேசியபாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன்.

பிரதமர் மன்மோகன் சிங்கின் விசேட தூதராக நேற்று தமிழகத்துக்கு வருகைதந்த நாராயணன், முதலமைச்சர் கருணாநிதியை சந்தித்து அவரிடம் இதனை நேரில் தெரிவித்தார்.

"நாங்கள் நேரடியாகத் தலையிடமாட்டோம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொள்ளுப்பிட்டியில் கருணா குழுவுக்கு அலுவலகம் திறப்பு

கொழும்பு, ஓக.10

கருணா குழுவினர் நேற்று கொழும்பில் அலுவலகம் ஒன்றைத் திறந்துள்ளனர்.

இந்த அலுவலகம் கொள்ளுப்பிட்டியில் திறக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையில் வாழும் தமிழ்மக்களுக்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்கும் பொறுப்பை தாங்கள் ஏற்கவுள்ளதாக கருணா அணியின் 'தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள்' என்ற அரசியல் பிரிவு தெரிவித்திருப்பதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (ஐ )

## மாவிலாறில் சண்டை இல்லை - அரசு ஷெல்வீச்சுத் தொடர்கின்றது - புலிகள்

கொழும்பு, ஓக.10

மாவிலாறு அணைக்கட்டுப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு விட்டன என்று அரச பாதுகாப்புத் தகவல் நிலையம் நேற்றுத் தெரிவித்தது. இருந்தும் அரச கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து தொடர்ந்து நேற்றும் ஷெல் மற்றும் ஆட்லறித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்று புலிகள் தெரிவிக்கின்றனர்.

"மாவிலாறு அணை இராணுவத்தினரால் திறக்கப்பட்டுவிட்டது. அதனைத் திறந்த கையோடு படையினர் சண்டையையும் நிறுத்தி விட்டனர்" என்று பாதுகாப்புத் தகவல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்கான புதிய ஆரம்பத்தை புலிகளுக்கு வழங்கத் தீர்மானம்

### சர்வகட்சி ஆலோசனைக்குழு அறிவிப்பு

சமாதானப் பேச்சுக்கான புதிய ஆரம்பம் ஒன்றை விடுதலைப்புலிகளுக்குப் பெற்றுக் கொடுக்க சர்வகட்சி ஆலோசனைக்குழு தீர்மானித்துள்ளது.

சர்வகட்சி ஆலோசனைக் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண இந்தத் தகவலை[illegible] தெரிவித்திருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் ஒன்றைத்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



யாழ். றோட்டறிக் கழகத்தின் புதிய தலைவராக றோட்டேறியன் என்.சரவணபவன் பதவியேற்பதையும் அவர் உரையாற்றுவதையும் றோட்டறிக் கழகத்தின் முன்னாள் தலைவர் ஈ.சரவணபவன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட பார்வையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தேவா)

# யாழ். றோட்டறிக் கழக தலைவராக சரவணபவன் நேற்றுப் பதவியேற்பு!

யாழ். றோட்டறிக் கழகத்தின் புதிய தலைவராக றோட்டேரியன் ரெலிகொம் நிறுவன யாழ். முகாமையாளர் என். சரவணபவன் நேற்றுப் பதவியேற்றுக்கொண்டார்.

இந்த வைபவத்தில் யாழ். வருகை தந்துள்ள றோட்டறிக் கழகத்தின் மாவட்ட ஆளுநர் ஜி.டி.பொபி சேனா வீர, அவரது பாரியார் ஆன் நினா சேனாவீர ஆகியோர் விசேட அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

இவர்களுடன் 3220ஆம் மாவட்டத்தின் செயலாளர் றோட்டேரியன் திரு மற்றும் ஆளுநரின் உதவியாளர் சாலிந்த வட்டபுளுவ ஆகியோரும் இந்த வைபவத்தில் கலந்துகொண்டனர்.

'உதயன்' விருந்தினர் விடுதியில் நடைபெற்ற இந்த வைபவத்தில் யாழ். றோட்டறிக் கழகத்தின் உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

றோட்டேரியன் என்.சரவணபவன் தற்போது இரண்டாவது தடவையாகத் தலைமை பதவியை ஏற்றுள்ளார். கடந்த வருடமும் யாழ். றோட்டறிக் கழகத் தலைவராக அவர் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-8)

# சமாதானத்தை ஏற்படுத்த றோட்டறிக் கழகம் தன்னாலான பங்களிப்பை வழங்கி வருகிறது

## மாவட்ட ஆளுநர் தெரிவித்தார்

யாழ்ப்பாணம்,ஓக.10

இலங்கைத் தீவில் சமாதானத்தைக் கொண்டு வந்து சகலருக்கும் நிம்மதியான வாழ்வு கிடைக்க றோட்டறிக் கழகம் தனது பங்களிப்பை வழங்கிவருகின்றது. இன, மத, மொழி வேறுபாடுகளைக் கடந்து செயற்படும் றோட்டறி அமைப்பு நாட்டில் சமாதானத்தைக் கொண்டுவர முழுமனத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

- இப்படிக் கூறினார் றோட்டறிக் கழகத்தின் மாவட்ட ஆளுநர் ஜி.டி.பொபி சேனாவீர.

யாழ்ப்பாணத்துக்கு ஒருநாள் விஜயம் மேற்கொண்டு நேற்று வந்த அவர் றோட்டறிக் கழகச் செயற்பாடுகள் குறித்து உதயனுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'உதயன்' அலுவலகத்தில் வைத்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களுக்கு கல்வியறிவு ஊட்டுவதும் வறுமையில் இருந்து அவர்களை மீட்பதும் றோட்டறியின் முக்கிய பணிகளாகும். தொழில்நுட்ப வளர்ச்சி எமது மக்கள் மத்தியில் ஏற்படவில்லை.

வெளிநாடுகளில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பப் புரட்சி எமது மக்களுக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம். கணனி அறிவை பாமர மக்களுக்கும் வழங்க விசேட பயிற்சி வகுப்புகளை நடத்தி வருகின்றோம்.

நாட்டின் பிரதான இருமொழிகளையும் சகலரும் பயில்வதன் மூலம் சமாதானத்தைக் கொண்டுவரலாம் என்பது எனது கருத்து. தமிழர் சிங்கள மொழியையும், சிங்களவர் தமிழ் மொழியையும் கற்பதன் மூலம் சமாதானத்தைக் கொண்டுவரலாம் என நான் நம்புகிறேன்.

யாழ். மாவட்டத்தில் றோட்டறிக்கழகம் சிறந்தமுறையில் செயற்படுகின்றது. நான்கு றோட்டறக் கழகங்களும் 24 இன்ரரக்ட் கழகங்களும் செயற்படுகின்றன. இக் கழகங்களில் அங்கம் பெறும் இளம் வயதினர் சிறப்பாகப் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு வழங்கப்படும் தலைமைத்துவப் பயிற்சிகள் மூலம் அவர்கள் எதிர்காலத்தில் தமது வாழ்வை வளப்படுத்த வாய்ப்புக் கிட்டியுள்ளது.



இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பல்லின மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் அந்த நாட்டில் அன்புகொண்டு வாழ்கின்றனர்.

அதேபோன்று இரு இனங்களைச் சேர்ந்த இந்த நாட்டு மக்களும் நாட்டின்மீது பற்றுக்கொண்டு வாழ்வதன் மூலம் சமாதானத்தை விரைவில் அடையலாம் - என்றார் அவர்.(ம-1)

# குணானந்தனுக்கு பல்கலையில் இன்று அஞ்சலி!

யாழ்ப்பாணம்,ஓக.10

மறைந்த நரம்பியல் நிபுணரும் யாழ். மருத்துவபீடத்தின் முன்னாள் விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி வி.குணானந்தனின் அஞ்சலி நிகழ்வு யாழ். மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிமுதல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

மருத்துவபீட மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த அஞ்சலி நிகழ்வில், விரிவுரையாளர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-13)

# மண்எண்ணெய்யின் ஆகக்கூடுதல் விலை ரூபா 59 மட்டுமே!

கிளிநொச்சி,ஓக.10

மண்எண்ணெய் லீற்றர் ஒன்றின் ஆகக்கூடுதலான சில்லறை விலை 59 ரூபா எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிதித்துறையின் விலைக் கட்டுப்பாட்டுப் பகுதி கிளிநொச்சியில் இருந்து அறிவித்துள்ளது.

இன்று வியாழக்கிழமையில் இருந்து இந்த நடைமுறை உடனடியாக அமுல்ப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# பருத்தித்துறையில் சுற்றிவளைப்பு

பருத்தித்துறை நகர்ப் பகுதி நேற்றுமுன்தினம் நண்பகல் திடீரென சுற்றிவளைக்கப்பட்டது. பஸ் நிலையம், வர்த்தக நிலையங்கள், சந்தை போன்றவற்றில் காணப்பட்டவர்கள் பலரிடம் அடையாள அட்டைகள் வாங்கிய பின்னர் நகர்ப் பகுதி முகாமுக்கு அவர்களை வருமாறு படையினர் பணித்தனர் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## காவலரண் அகலும் வரையும்

# சென்.ஜோன்ஸ் மாணவர் போராட்டம் தொடரும்!

தமது கல்லூரிக்கு முன்பாகவுள்ள இராணுவக் காவலரணை அகற்றக் கோரி சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் ஆரம்பித்துள்ள பகிஷ்கரிப்புப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்து நடந்தது.

காவலரண் அகற்றப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று கல்லூரியின் தமிழ் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

"எமது கல்லூரிக்கு ஆதரவாக அயலில் உள்ள பாடசாலைகளும் போராட்டத்தில் குதிக்கவுள்ள நிலையில் இராணுவம் எமது கோரிக்கைகளுக்கு விரைந்து முடிவுதர வேண்டும். காவலரண் அகற்றப்படும் வரை போராட்டத்தில் ஈடுபடுவதில் நாம் உறுதியோடும் நம்பிக்கையோடும் இருக்கின்றோம். இராணுவம் எமது பிரச்சினையை விளங்கிக் கொண்டு எமது கோரிக்கையை ஏற்க முன்வர-வேண்டும்."- என்று கல்லூரி தமிழ் மாணவர் ஒன்றியம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கை ஏற்கப்படாத பட்சத்தில் அரச பணிகள் முடக்கப்படும் என்றும் அது எச்சரிக்கை விடுத்துள்ளது. (ம)

# மௌலவி கடத்தலுக்கு மாணவர் ஒன்றியம் கடும் கண்டனம்!

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாநகர சபை வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தவரான மௌலவி சாகீர் நேற்று புத்தளத்தில் வைத்துக் கடத்தப்பட்டார்.

அவரது கடத்தலை வன்மையாகக் கண்டித்துள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அரச புலனாய்வுத்துறையினராலேயே அவர் கடத்தப்பட்டுள்ளார் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மௌலவி சாகீர், "யாழ்.குடாநாட்டில் தமிழ், முஸ்லீம் மக்களுக்கு இடையே சிறந்த நல்லுறவைப் பேணுவதில் முன்னின்று உழைத்தவர். அத்துடன் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அராஜகங்களுக்கு எதிராக துணிந்து நின்று குரல் கொடுத்தவர்" என்று ஒன்றியம் விடுத்த அறிக்கை தெரிவித்தது.

இந்த விடயத்தில் அரசு உடனடியாகச் செயற்பட்டு சாகீரை விடுவிக்க வேண்டும் என்றும் ஒன்றியம் கேட்டுள்ளது. இல்லையேல், "ஜனநாயக வழியிலான போராட்டங்களுக்கு சாவு மணி அடிக்கப்பட்டுவிடும்" என்றும் அது தெரிவித்துள்ளது. (ம)

# யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கதி மூதூர் மக்களுக்கும் உண்டாக அனுமதியேன்

## ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு,ஓக.10

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட கதி மூதூரைச் சேர்ந்த முஸ்லிம் மக்களுக்கு உண்டாவதற்கு நான் இடமளிக்கமாட்டேன்.

நான் பதவியில் இருக்கும்வரையில் ஒரு சிங்களக் குடிமகனோ அல்லது தமிழ், முஸ்லிம் குடிமகனோ அநியாயமாகக் கொல்லப்படுவதையும் நான் அனுமதிக்கப்போவதில்லை.

இவ்வாறு முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பின்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

மூதூரில் இருந்து வெளியேறிய முஸ்லிம் மக்களின் நிலைமை மற்றும் தற்போதைய நிலைமை குறித்து ஆராய்வதற்காக அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூட்டம் ஒன்று நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

மூதூரில் இருந்து வெளியேறி நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் குறைகளைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான சகல நிவாரண உதவிகளையும் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தாக்குதல் காரணமாக சீர்குலைந்துள்ள மூதூரின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் சீர்செய்து அங்கு மக்களைத் துரிதமாக மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கும்படியும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மூதூரின் பாதுகாப்பு நிலைவரம் குறித்து இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.(ம-1)

# மூதூர் மோதலில் வீரச்சாவடைந்த இரு மாவீரர்களின் நடுகல் திரை நீக்கம்

கிளிநொச்சி, ஓக.10

திருமலை - மூதூர் பகுதியில் கடந்த 2 ஆம் திகதி நடந்த இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இருமாவீரர்களின் திருவுருவப்படங்கள், நடுகல் திரை நீக்கம் நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி,கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

கப்டன் விழியரசி (முருகையா இராஜேஸ்வரி - 3 ஆம் வாய்க்கால், பன்னக்கட்டி) என்பவரின் திருவுருவப்படம் அவரது இல்லத்தில் இருந்து நேற்று மு.ப. 9.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு பன்னக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசா[illegible]

மக்கள் அஞ்சலி செலுத்தியபின் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு, கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் முற்பகல் 11.30 மணிக்கு நடுகல் திரை நீக்கம் செய்யப்பட்டது.

மேஜர் இசைவிழி அல்லது வாணி (தெய்வேந்திரம் குணேஸ்வரி 150 வீட்டுத்திட்டம், முட்கொம்பன், அக்கராயன்)என்பவரின் திருவுருவப்படம் அவரது இல்லத்தில் இருந்து நேற்று பி.ப. 3 மணிக்கு எடுத்துச்செல்லப்பட்டு முட்கொம்பன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, மக்கள் அஞ்சலியின் பின்னர் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் திருவுருவப்படம் கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு பிற்பகல் 5.30 மணிக்கு நடுகல் திரைநீக்கம் செய்யப்பட்டது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# தமிழ் ஊடகவியலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்குங்கள்!

* தமிழ் ஊடகவியலாளர்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.
* ஊடகவியலாளர்களுக்கும் விசேட காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும்.
* தமிழ் ஊடகவியலாளர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடத்தப்படுகின்றார்கள். இது திருத்தப்பட வேண்டும்.

- இவ்வாறெல்லாம் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிக் கோரியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன்.

ஊடகவியலாளர்களுக்கு ஓய்வூதிய வசதிகளைப் பெற்றுக் கொடுக்கும் விசேட சட்ட மூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இந்த விடயங்களை அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இனப்பிரச்சினை விவகாரத்தில் பெரும்பான்மையினத்துக்குச் சாதகமாக - ஒரு பக்கச் சார்பாக - தென்னிலங்கை ஊடகவியலாளர்கள், குறிப்பாக ஆங்கில, சிங்கள ஊடகவியலாளர்கள் செயற்படுகின்றனர் என்று குற்றம் சுமத்தும் மகேஸ்வரன் எம்.பி., அவர்களை மேலும் 'தாஜா' செய்து கையில் போடுவதற்காக இந்த ஓய்வூதிய வழி என்ற சலுகையைப் பயன்படுத்த அரசு முயல்கின்றது என்றும் கூறினார்.

ஊடகவியலாளர்களுக்கு சலுகையாக அல்லாமல் அவர்களின் சேவைக்கும், பணிக்குமுரிய மதிப்பீடாக ஓய்வூதிய வசதி செய்யப்பட்டால் அது முற்றிலும் வரவேற்கத்தக்கதே என்று கூறும் அவர், இந்த நாட்டில் தமிழ்த் தேசிய இனத்தின் நலனுக்காகக் குரல் எழுப்பும் தமிழ் ஊடகவியலாளர்களின் அவல நிலையையும் அங்கு அம்பலப்படுத்தத் தவறவில்லை.

தமது மக்களின் - இனத்தின் - நலனுக்காகக் குரல் எழுப்பும் ஒவ்வொரு தமிழ் ஊடகவியலாளனும் தென்னிலங்கையில் சந்தேகக் கண் கொண்டு பார்க்கப்படுகின்றான். தமிழ்த் தேசியத்தை வலுவாகப் பிரதிபலிக்கும் ஒவ்வொரு தமிழ்ப் பத்திரிகையாளனுக்கும் புலிச்சாயம் பூசப்படுகின்றது.

பிரபலமான ஆங்கில, சிங்கள ஊடகவியலாளர்களுக்கு விசேட அதிரடிப் படையினரின் உச்சப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும் அதே சமயம், தமிழர் நலனுக்காகக் குரல் எழுப்பும் ஊடகவியலாளர்களுக்கு என்ன பாதுகாப்பு தரப்பட்டிருக்கின்றது என்று மகேஸ்வரன் எம்.பி. கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

கொழும்பில் 'சுடர் ஒளி' நாளிதழ் வெடிகுண்டு கொண்டு தாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் 'உதயன்' அலுவலகம் ஆயுதம் தாங்கிய காடையர் கும்பலால் கொடூரத் தாக்குத லுக்கு இலக்கானது. அந்த நிறுவன ஊழியர்கள் அச்சுறுத்தப் படுகின்றார்கள்.

பத்திரிகையாளர்கள் நிமலராஜன், நடேசன், சிவராம், சுகிர்தராஜன் என்று தமிழ் ஊடகவியலாளர்கள் காலத்துக்குக் காலம் கொல்லப்படுகின்றார்கள். தமிழரின் அபிலாஷைகளைப் பிரதிபலித்த குற்றம்தான் இவர்கள் எல்லோரும் செய்த தவறு.

கிழக்கில், அரச படைகளுடன் இயங்கும் ஒட்டுப் படைகள், துணைப்படைகளின் அச்சுறுத்தலால் கிழக்கில் இருந்து பல தமிழ் ஊடகவியலாளர்கள் புலம் பெயர்ந்துள்ளனர். பலரின் பேனாக்கள் முடக்கப்பட்டிருக்கின்றன. சிந்தனைக்குத் தடை போடப்பட்டுள்ளது.

இவற்றின் உச்சமாக ஒட்டுப்படை அட்டகாசம் மிகுந்த பகுதிகளில் தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிக்கும் நாளிதழ்களின் விநியோகமே தடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த அடாவடித்தனத்தைப் பார்த்திருப்பதன் மூலம் - அல்லது அதனைத் தூண்டி, வழிநடத்துவதன் வாயிலாக - பத்திரிகைச் சுதந்திரத்தை மீறும் இந்த வரலாற்றுத் தவறுக்கு இலங்கை அரசுத் தரப்பே உடந்தையாகியிருக்கின்றது.

ஊடகவியலாளர்களையும், ஊடகங்களையும் அச்சுறுத்தி அடக்குவதன் மூலம் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியை அடக்கி விடலாம் என்று பேரினவாதம் சிந்திக்குமானால் அது தோற்றுப் போகும். அதைத் தென்னிலங்கை முதலில் உணர்ந்து கொள்வது நல்லது.

தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை விஸ்வரூப வளர்ச்சி பெற்று, விசாலமாகப் பரிணாமமடைந்து, விரிந்து அளப்பரிய வேகத்துடன் கிளை பரப்பி வருகையில், ஒரு சில நாளிதழ்களையும், ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்துவதன் மூலமோ அல்லது நாளிதழ் விநியோகங்களைத் தடுப்பதன் மூலமோ ஓரினத்தின் தேசிய எழுச்சியைத் தடுத்து, மறைத்து ஒழித்து விடலாம் என மனக்கோட்டை கட்டுவது வெறும் முட்டாள்தனமின்றி வேறில்லை. அது வெறும் பகல் கனவாகவே போய் முடியும். சூரியப் பிரகாசம் பரவுவதை சாக்குக் கொண்டு மூடி மறைத்துவிட முடியாது.

தமிழ் ஊடகவியலாளர்கள் படுகொலை, அவர்களுக்கு எதிரான மிரட்டல்கள், தமிழ் நாளிதழ் அலுவலகங்கள் தாக்கப்பட்டமை, தமிழ் நாளிதழ் விநியோகம் அச்சுறுத்திப் பலவந்தமாகத் தடுக்கப்பட்டமை போன்ற விடயங்களில் குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டு வந்து நிறுத்துவதிலும், பாதிப்புற்ற ஊடகத் தரப்புக்கு உரிய நிவாரணமும், பாதுகாப்பும் வழங்கி நிலைமையைச் சீர்செய்து, நெறிப்படுத்துவதிலும் அரசுத் தரப்பு நீதியாக - நேர்மையாக - மனச்சுத்தியுடன் - முழு அதிகாரத்தையும் உரிய நேர் வழியில் பயன்படுத்தி ஈடுபடவில்லை என்பதே தமிழ் ஊடகவியலாளர்களின் ஒரே ஆதங்கம். இவ்விடயங்களில் அரசு வெறும் வாய்ச் சொல் அறிக்கைகளை வெளியிடுவதை விடுத்து, பயன்தரு பெறுபேறுகளை செயலில் செய்து காட்ட வேண்டும். ஆனால், அரசுத் தலைமை அதைச் செய்யாமல் வெறும் பாசாங்கு அறிவிப்புகளையும், தகவல்களையும்தான் வெளியிட்டு வருகின்றது.

தமிழ் ஊடகத்துறையின் காதில் பூச்சுற்றும் இந்த வேலை தமிழ் ஊடகத்துறையின் மட்டத்தில் எடுபடமாட்டாது என்பது நிச்சயம்.

தமிழ் ஊடகத்துறையின் சுதந்திரத்தைப் பறித்து, அடக்கும் தென்னிலங்கை எத்தனம், விபரீத விளைவுகளையே அதற்குத் தரும் என்பதை வரலாற்றுப் பட்டறிவு அதற்கு விரைவில் உணர்த்தும்.

தொண்டர் ஆசிரியர் நியமன விவகாரம்:

# மத்திய அமைச்சு தீர்மானிக்கும் விடயத்துக்கு வலய அலுவலகம் முன் போராடிப் பயனில்லை!

## மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஓக.10

தொண்டர் ஆசிரியர் நியமனம் குறித்து மத்திய கல்வி அமைச்சே தீர்மானிக்கவேண்டும். வலயக் கல்வி அலுவலகம் முன் மறியல் செய்வதால் பயனில்லை.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.தியாகலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். கல்வி வலயத்தின் முன்பாக மறியல்போராட்டத்தில் ஈடுபடும் தொண்டர் ஆசிரியர்கள் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவிருக்கும் 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு இடையூறு விளைவிக்காத விதத்தில் தமது போராட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டும். அவ்வாறு விலக்கிக்கொள்ளாவிடில் நடவடிக்கைக்கு உள்ளாக வேண்டி ஏற்படும்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்குவது தொடர்பான அதிகாரம் வலயக் கல்விப் பணிப்பாளருக்கோ மாகாணக் கல்வி நிர்வாகத்திற்கோ இல்லை. இது தொடர்பான தீர்மானத்தை மத்திய கல்வி அமைச்சே மேற்கொள்ளவேண்டும். இந்த நிலையில் வலயக் கல்வி அலுவலகத்தைச் செயற்படவிடாமல் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதில் எந்தப் பயனும் இல்லை.

தொண்டர் ஆசிரியர்களைப் பாடசாலைகளில் கடமையாற்ற அனுமதிக்க வேண்டாம் என காலத்திற்குக் காலம் பாடசாலைக்குச் சுற்றறிக்கைகள் அனுப்பிய போதிலும் தொண்டர் ஆசிரியர் பிரச்சினை தொடர்ந்துகொண்டு வருகின்றது - இவ்வாறு செயலாளர் கூறினார். (11)



கடந்த சனிக்கிழமை மூதூர் நகரில் பட்டினிக்கெதிரான நிறுவனத்தின் பணியாளர்கள் 17 பேரும் அலுவலகத்தில் சடலங்களாக மீட்கப்பட்டனர். கொல்லப்பட்ட பணியாளர்களின் இறுதிச்சடங்குகள் நேற்று இடம்பெற்றன. அந்த இறுதிச்சடங்குகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# முடக்கப்படும் வங்கிக்கணக்கை மீளவும் உயிர்ப்பிக்கும் வழி என்ன?

கொழும்பு,ஓக.10

வங்கிக்கணக்கொன்று முடக்கப்பட்டுவிட்டதான நிலையிலும்கூட வாடிக்கையாளர் ஒருவர் தமது கணக்கை மீளவும் இயங்கவைக்க அல்லது பணத்தை மீளப்பெற்றுக்கொள்ள விரும்பின் அவர் தம்மை முறையாக அடையாளப்படுத்திக்கொண்டு அவ்வாறு செய்ய முடியும்.

வங்கிகளில் பணம் வைப்பிலிடப்பட்ட கணக்குகள் முடக்கப்படுவது தொடர்பாகவும் அதனுடனான பிரச்சினைகள் தொடர்பாகவும் ஸ்ரீலங்கா வங்கிகள் சங்க (உத்தரவாத) நிறுவனத்தின் செயலாளர் நாயகம் உபாலி டி சில்வா விடுத்துள்ள விளக்கமொன்றில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவித்திருப்பதாவது:-

பத்துவருடங்களுக்கு மேலாக எதுவித செயற்பாடுமின்றி கிடந்துவரும் கணக்குகளைக் கைவிடப்பட்டவையாகக் கருதவேண்டும் என்ற வங்கிகள் சட்டத்தின் பிரிவுகள் பற்றி ஸ்ரீலங்கா வங்கிகள் சங்க நிறுவனம் வாடிக்கையாளர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

பாதுகாப்பு லொக்கர்களைப் பொறுத்தவரை லொக்கர் வைத்திருப்பவர் எந்தவித அறிவித்தல்களுக்கும் பதிலளிக்காமல் இருப்பாரானால் வாடகைக் காலம் முடிவடைந்ததின் பின்னர் மூன்று வருடம் மட்டுமே செல்லுபடியாகும். இந்தப் பணம் அல்லது பொருள்கள் மத்திய வங்கி அறிவிக்கும் பொழுது அங்குதிருப்பியனுப்பப்படும்.

இருந்தபோதிலும் நீண்டகாலமாகத் தமது கணக்குகளைச் செயற்படுத்தாமல் இருந்துவந்துள்ள வாடிக்கையாளர்கள் தமது சொத்துக் கைவிடப்படவில்லையென்று காட்டுவதற்குப் பின்வரும் வகையில் சில நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

* ஒரு வாடிக்கையாளரின் கணக்கு எனில் ஒரு வைப்பிடலை அல்லது பணம் மீளப்பெறலை மேற்கொள்ளலாம்.
* முகவரி மாற்றம் அல்லது வேறு ஒரு எழுத்து மூலமான தொடர்பை மேற்கொள்ளலாம்.
* கணக்கைச் சரிசெய்வதற்காக 'பாஸ்' புத்தகத்தைச் சமர்ப்பிக்கலாம்.
* பாதுகாப்பு லொக்கர் கட்டணம் செலுத்தப்படாதிருப்பின் அதனைச் செலுத்தலாம்.
* நிலுவையைச் சரி பார்த்தல் போன்ற ஏதாகிலும் எழுத்து மூலமான தொடர்பை ஏற்படுத்தலாம்.

நிலையான கணக்கு வைத்திருப்பவர்கள் - பணமாக அல்லது வெளிச்செலாவணியாக - தன்னிச்சையாக புதுப்பிப்பதற்கான அறிவுறுத்தலை வங்கிக்கு கொடுத்திருப்பின் மீள செயற்படுவதற்கான நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை. தன்னிச்சையாக புதுப்பிக்கும் செயற்பாடு தமது கணக்கு மீளவும் செயற்படுவதை உறுதிப்படுத்துவதாகும்.

ஒருகணக்காளருக்கு வழமையாக கணக்கு அறிக்கைகள் அனுப்பப்படும் போது அதற்கான பிரதிபலிப்பு தேவைப்படுவதில்லை. அவை வழங்கப்படாமல், திரும்பிவராத பட்சத்தில் செயற்பட்டுவருவதாகவே மத்திய வங்கி கணக்கிலெடுக்கும் - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# நல்லூர், மண்ணித்தலை மத நிகழ்வுகள் அசாதாரண சூழ்நிலையால் ரத்தாகின

யாழ்ப்பாணம்,ஓக.10

குடாநாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையால் நல்லூர் மற்றும் மண்ணித்தலையில் நடைபெறவிருந்த நிகழ்வுகள் ரத்துச்செய்ய நேரிட்டுள்ளது.

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காமம் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இடம்பெறும் ஆடிவேல் ரத பவனி இம்முறை இடம்பெறவில்லை என ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ குமாரக்குருக்கள் தெரிவித்தார்.

நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஆடிவேல் ரத பவனி வழமையாக இடம்பெறும். ஆனால், தற்போதைய சூழ்நிலையால் இந்த ஆண்டு ரத பவனி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனினும், நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சட்டநாதர் வீதி வழியாக ஆலயம் வரை வேல் ரத பவனி நடைபெறும்.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் 5.30 மணிவரை தீர்த்த உற்சவம் நடைபெறும் என்றும் பிரதம குரு தெரிவித்தார்.

இதேவேளை, மண்ணித்தலையில் அமைந்துள்ள புனித செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நவநாள் ஆராதனைகள், சுற்றுப்பிரகாரம் என்பன இவ்வாண்டு அங்கு நடைபெறாதென்று ஆலய பரிபாலன சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் நிலவும் பதற்றமான சூழ்நிலையே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பாஷையூர் மக்கள் அங்கு சென்று தங்கி நின்று வருடாந்தத் திருவிழாவை முடித்து வருவது வழக்கமாகும்.

இதற்கான அனுமதியும் வள்ளங்களுக்கான 'பாஸ்' அனுமதியும் பாதுகாப்புத் தரப்பினரிடமிருந்து பெறப்பட்டுள்ளபோதும் இந்த மாதம் 23ஆம் திகதி ஆரம்பித்து அடுத்த மாதம் 3ஆம் திகதிவரை நடைபெறவிருந்த விழா தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. குறித்த காலத்தில் பூசை வழிபாடுகள் பாசையூர் அந்தோனியார் கோயிலில் நடைபெறும். (111-88)

## நாளை

ஆடி 26
வெள்ளிக்கிழமை
11.08.2006
திதி : துதியை
பிற்பகல் : 12.59
நட்சத்திரம் : சதயம்
[illegible]
[illegible] : 06.04 - 07.34
ராகுகாலம் : 10.34 - 12.04

# குண்டுவீச்சில் மக்கள் பலியாவதை அரசு நியாயப்படுத்த முடியாது!

## முன்னாள் விமானப் படைத்தளபதி கருத்து

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல்களால் பொதுமக்கள் பலியாவதை அரசு ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் விமானப் படைத்தளபதியும் தற்போதைய விமானப் படைத்தளபதியின் தந்தையுமான ஏர்மார்ஷல் ஹரி குணதிலக.

மாவிலாறு அணையைத் திறப்பதற்கான நடவடிக்கையின்போது இடம்பெற்ற விமானத் தாக்குதல்களின்போது பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் கூறியதாவது:-

மாவிலாறுப் பிரச்சினைக்கு குண்டுத்தாக்குதல் நடத்துவது தீர்வாகாது. மாவிலாறுப் பிரச்சினை தொடர்பாக அரசு விடுதலைப் புலிகளுடன் பேசித் தீர்வை எட்டவேண்டும்.

மஹிந்த சிந்தனையில் யுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எனினும், ஜே.வி.பியினர் அரசை யுத்தத்திற்குத் தள்ளுகின்றனர். ஜனாதிபதி மஹிந்தவை யுத்தத்தை நடத்துமாறு ஜே.வி.பி. தொடர்ச்சியாக வற்புறுத்துகின்றது. இறுதியில் அவர்களே முடிவெடுப்பவர்களாகவும் மாறுகின்றனர் - என்றார். (202)

## உதயவாக்கு

அதிகம் அலட்டாதவன் சிறந்த மனிதன்.

- ஷேக்ஸ்பியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சுப்பர்
**சுப்பிரமணியம்**

மலர்வு 05-03-1933 உதிர்வு 01-08-2004

அன்பாலே அரவணைத்து அறிவோடும்
பண்போடும் எம்மை வழிகாட்டி
எம்மை ஆளாக்கிய தந்தையே!
தரணியிலே தவிக்கின்றோம்
தம்மைப் பிரிந்து
ஆண்டுகள் இரண்டு ஆனாலும் எந்நாளும்
தங்களை மறவோம்...!

*50/31, செட்டித்தெரு,*
*நல்லூர்,*
*யாழ்ப்பாணம்.* (சி/50734)(32-19-17)

**குடும்பத்தினர்.**


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

803 நிலம்

வெற்றி இலக்கங்கள்

துலாம் 03 30 36 40

08-08-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 4440498 - 4456004

ஜக்பொட் பரிசு ரூபா. 4,025,250/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 341,453 | 10/- | 3,414,530/- |
| 2 இலக்கங்கள் | 31,383 | 20/- | 627,660/- |
| 1 இல. + லக்கினம் | 31,166 | 30/- | 934,980/- |
| 2 இல. + லக்கினம் | 2,830 | 100/- | 283,000/- |
| 3 இலக்கங்கள் | 833 | 500/- | 416,500/- |
| 3 இல. + லக்கினம் | 73 | 5,000/- | 365,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,025,250/- | - |
| மொத்தம் | | | 6,441,670/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 407,747 | | 7,465,170/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,788,150/-

தொடர் இல.5335988 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2006 ஆகஸ்ட் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 4451752-3-26 |
| புத்தளம் | 4455377-3-22 |
| கொழும்பு | 4453124-3-41 |
| கம்பஹா | 4446609-5-05 |
| களுத்துறை | 4453881-3-33 |


# மரண அறிவித்தல்

## இராசையா செல்வரத்தினம் (அத்தை)



பொன்னாலை, நெல்லியானைப் பிறப்பிடமாகவும் மடத்தடி லேன், லோட்டன் றோட், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா செல்வரத்தினம் அவர்கள் 08.08.2006 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை இராசையாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற செல்லையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகளும் திரு.திருமதி ஐயாத் துரை சிவக்கொழுந்து அவர்களின் அன்பு மருமகளும் காலஞ் சென்றவர்களான நாகரத்தினம், இராசரத்தினம் ஆகியோரினதும் விஜயரத்தினம் (கொழும்பு), பாலரத்தினம், சந்தணகுமாரன், சிவ குமாரன் (ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சத்தியலட்சுமி, திலகவதி, விஜயலட்சுமி அஞ்சனா, தேவகல்யாணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் காந்தினி, தியாந்தினி, அனுசா, தனுசா, விஜயசாந்தி, யோகநாதன், பிரியதர்சினி, விஜிதா, சுமிர்தா, பிருந்தாபன், ஆரணி, வித்தியா, சிவகனி, சிவசன், அபிஷாதனா ஆகியோரின் பாசமிகு அத்தையும் கனகலிங்கம் (தெய்வம்), சர்மில், சுரேஸ், தீபன், ஆகியோரினதும் கலாவதிதேவி, சிறிகாந்தன், சுசிலாதேவி ஆகியோரின் சிறிய தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மானிப்பாய் இல்லத்தில் நாளை (11.08.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பிப்பிலி மயானத்தில் தகனக்கிரியைகள் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மடத்தடி லேன்,
லோட்டன் றோட்,
மானிப்பாய்.
0773769367 (53234)(21-32-19-17)

தகவல்:
**சகோதரர்கள்,**
**மருமக்கள்.**

# மனிதநேயப் பணியாளர்களை மதித்து நடந்துகொள்ளவேண்டும்

## சர்வதேச செஞ்சிலுவைக் குழு வலியுறுத்து

கொழும்பு,ஓக.10

மனிதநேய பணிகளில் ஈடுபட்டுள்ள முகவர் அமைப்புக்களின் பணிகளை மோதல்களில் சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்புகளும் மதித்து நடந்துகொள்ளவேண்டும். அவர்களின் பணிகளோ பணியாளர்களோ பாதிக்கப்படும் வகையிலான நடவடிக்கைகளை தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு வற்புறுத்தியுள்ளது செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு.

பிரெஞ்சு மனிதநேய நிறுவனத்தின் உள்ளூர் பணியாளர்கள் 15பேர் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் நகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ள சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக்குழு இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது.

மோதலில் சம்பந்தப்படாமல் பொதுமக்களுக்கு பணியாற்றுவதில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் தாக்குதல்களுக்குள்ளாகாமலிருக்கவும் பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் நடமாடவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தேவையான நடவடிக்கைகள் எடுத்து உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அக்குழு வற்புறுத்தியுள்ளது.

செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு கந்தளாயில் இடம்பெயர்ந்துவந்துள்ள மக்களுக்கு 335கூரை விரிப்புகளும் சவர்க்காரம், சவர்க்காரத்தூள், சவரத்தகடுகள், ரவல்கள், ஷாம்பு போன்ற பொருள்கள் அடங்கிய 335 பொதிகளையும் வழங்கியுள்ளது. மேற்கொண்டும் உதவிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. (ப)

## சைவ வித்தியா விருத்திச் சங்கம்
## ஆசிரியர்கள் வெற்றிடம்

**எமது இல்ல மாணவர்களுக்குப் பின்வரும் பாடங்கள் கற்பிப்பதற்கு அர்ப்பணிப்புள்ள பட்டதாரி/பயிற்றப்பட்ட ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

| | |
|---|---|
| தமிழ் | - தரம் 11, 12 |
| கணிதம் | - தரம் 08, 09 |
| புவியியல் | - தரம் 11, 12 |
| சமூகக்கல்வி | - தரம் 10, 11 |
| விஞ்ஞானம் | - தரம் 08, 09, 10, 11 |
| ஆங்கிலம் | - தரம் 06, 07, 08, 09 |

**அறநெறிப் பாடசாலையில் தரம் 06, 07, 08, 09, 10, 11 மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கும் உரிய கல்வித் தகைமையுடைய ஆசிரியர்கள் தேவை.**

**விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய இறுதிநாள் - 20.08.2006**

**சைவவித்தியா விருத்திச் சங்கம்,**
**கலாசாலை வீதி, திருநெல்வேலி** (சி/50733) (32-19-17)

சு.பசுபதி
*செயலாளர்.*

# கண்ணீர் அஞ்சலி

*யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் உப தலைவர்*
**திரு.இரா செல்வவடிவேல்** *அவர்களின் பாசமிகு தாய்*
**திருமதி இராமசாமிச்செட்டியார் சுப்பம்மாள்**
*அவர்களின் மறைவையிட்டு சபையினர் கவலை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

66, கல்லூரி வீதி, நீராவியடி,
யாழ்ப்பாணம். (53207)(32-19-17)

**சைவபரிபாலன சபை.**

# கண்ணீர் அஞ்சலி



*எமது வங்கியின் முகாமையாளர்*
**திரு.வி.அருளானந்தம்**
*அவர்களின் அன்புச் சகோதரன்*
*பேராசிரியர்*
**வி.குணானந்தம்**
*அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**ஊழியர்கள்,**
**தேசிய சேமிப்பு வங்கி (NSB),**
**யாழ்ப்பாணம்.**

(53149)
(32-19-17)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மா.நாகரத்தினம்**
*(உரிமையாளர் - நாகரட்ணம் எலெக்ரிக்கல், 62, 127, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், பங்காளர் - பிறிட்டிஸ் லைற் லங்கா பிறைவற் லிமிட்டட்) (ரென் B)*

**ஆண்டுகள் நான்கானாலும்**
**ஆறவில்லை உங்கள்**
**நினைவு**
**சூழ்நிலைகள் மாறிடினும்**
**சுற்றி நின்ற உங்கள்**
**நினைவு**
**எந்நாளும் மாறாது.**

[illegible]
*சுன்னாகம்.* (53119)(32-19-17)

**குடும்பத்தினர்.**

## புங்குடுதீவு சமூர்த்தி வங்கியை அரச அதிபர் திறந்துவைத்தார்

புங்குடுதீவு சமூர்த்தி வங்கியின் புதிய கட்டடம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஸினால் திறந்துவைக்கப்பட்டது.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தீவக சமூர்த்தி வங்கிச் சமாசத்தின் பொதுமுகாமையாளர் எஸ்.கருணாநிதி, புங்குடுதீவு கிராஞ்சியம்பதி கந்தசுவாமி கோயில் அறங்காவலர் சபைத் தலைவர் த.தவராசா, சமூர்த்தி உத்தியோகத்தர் கே.அஜந்தன் ஆகியோர் உரையாற்றினர். யாழ். அரச அதிபர் க.கணேஸ் மங்கள விளக்கை ஏற்றிவைத்து வங்கியைத் திறந்து புதிய கணக்குகளை ஆரம்பித்துவைத்தார். (1-111-167)

## அனுமதி அட்டைகளைப் பெற அறிவுறுத்தல்

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை மற்றும் தரம் 10 மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் பாடப் பரீட்சை ஆகியவற்றுக்கான அனுமதி அட்டைகள் வந்துள்ளன.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் 12 ஆம் திகதி சனிக்கிழமையும் தரம் 10 மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் பாடப் பரீட்சை ஓகஸ்ட் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் ஒதுக்கப்பட்ட பாடசாலைகளில் நடைபெறவுள்ளன. பாடசாலைகள் தத்தமது பிரிவுக் கோட்டக் கல்வி அலுவலகங்களில் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விக் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் அறிவித்துள்ளார். (117)

# அஞ்சலி



**வைத்தியகலாநிதி V.குணானந்தம்**
நாம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்,
வருகைநிலைப் பேராசிரியர் (யாழ்.மருத்துவ பீடம்)
வாழ்நாள் உறுப்பினர், முன்னாள் தலைவர்
(யாழ்.மருத்துவ சங்கம்)

எனது பாடல்கள் யாவும்
தமது,
வேறு வேறுபட்ட இசைக் கூறுகளை
தனி ஒரு ஒழுங்கில் சேர்த்து,
உன்னை,
ஒரு முறை வணங்கி வாழ்த்துவதில்,
சலனமற்ற கடலொன்றினை நோக்கி
ஓடிப் பெருகட்டும்.

*அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினரோடு நாமும் துயர் பகிர்கிறோம்.*

**- யாழ்.மருத்துவ சங்கம்.**

(53149)(32-26-19-17)


A2Z COM.COM இன்
அதிரடி விலைக்கழிவு

தரம் வாய்ந்த
Flash memory Sticks...(USB)
முற்றிலும் வித்தியாசமான அழகிய வடிவமைப்பில்

With Password protection

எங்குமில்லாத விலையில்

256 MB - 1690/=
512 MB - 2690/=

மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு சலுகை விலைகள்.. TP 0777447969

@ 192, Navalar Road, Jaffna
(ஈழநாடு அலுவலகம் முன்பாக, பெருமாள் கோவிலடி)

கையிருப்பு உள்ளவரை மட்டுமே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிய இலக்குகளை அடையத் தவறும் தொழில் உபகரணம் வழங்கும் திட்டம்

நல்லூர், ஓக.10

வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக் குடன் தொழில் உபகரணங்கள் வழங்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆனால் இத்தகைய திட்டங்களில் பலவும் உரிய இலக்கை அடைவதில்லை என்று கூறப்படுகிறது.

அண்மையில் தீவகப் பகுதியில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கடற்றொழிலாளர்களுக்கு தொழில் உபகரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் மீன்பிடி வலைகளை வழங்கியது. இந்த வலைகளைப் பெற்றவர்களில் சிலர் அவற்றை வெளியிடங்களுக்கு எடுத்துச் சென்று விற்றனர் என்று தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளது.


இந்த வலைகள் அமைப்பொன்றினூடாக இலவசமாக வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. ஆனால் குறிப்பிட்ட அமைப்பு வலைகளுக்கு கடற்றொழிலாளர்களிடமிருந்து ஆயிரத்து 900 ரூபா வரை அறவிட்டதாகவும் கூறப்படுகிறது.இது ஒரு புறமிருக்க தொழில் உபகரணம் வழங்கும் திட்டங்கள் பெரும்பாலும் உரிய இலக்கை அடைவதில்லை என்று கருதப்படுகிறது.

ஒரு பகுதியில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு தொண்டு நிறுவனம் தொழில் உபகரணங்களை இலவசமாக வழங்கும் . பயனாளிகளில் பலரும் தமக்கு வழங்கப்படும் தொழில் உபகரணங்களை வேறிடத்துக்கு எடுத்துச்சென்று விற்றுவிடுகின்றனர் என்பதை நடைமுறையில் காணக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு விற்றுவரும் பணத்தை செலவு செய்யும் பயனாளி வறுமைக்கோட்டின் கீழேயே தொடர்ந்து வாழ்கிறார்.

இந் நிலையில் வேறொரு நிறுவனம் அதே பகுதிக்கு தொழில் உபகரணங்களை வழங்க வரும் போது வறுமைக்கோட்டின் கீழ்உள்ள அதே பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றனர் மீண்டும் தமக்கு வழங்கப் படும் தொழில் உபகரணங்களை விற்று செலவு செய்கின்றனர்.

இந்த நிலையை மாற்றுவதில் கிராம சேவையாளர்கள், சமுர்த்தி அலுவலர்கள் ஆகியோர் அக்கறை செலுத்த வேண்டும் என்றும் -உதவிகளை வழங்கும் நிறுவனங்களும் இது குறித்து கூடிய கவனம் எடுக்க வேண்டும் என்றும் -சமூகநலன் விரும்பிகள் எதிர்பார்க்கின்றனர். (111)



புனித பத்திரிசியார் கல்லூரியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியின் வைத்திய அதிகாரி டாக்டர் சிவசங்கர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் குருதிக்கொடையாளரின் உடல் தகுதியைப்பரிசோதிப்பதையும் மாணவர்கள் இரத்த தானம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## மினிபஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

கொழும்புத்துறைக்கும் யாழ்.நகருக்குமான மினிபஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சேவை தற்போது யாழ்.நகரில் இருந்து கொழும்புத்துறை- நெடுங்குளம் வரை இடம் பெற்று வருகிறது. (17)

## கணிதபாட மதிப்பீட்டுப் பரீட்சை

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கு விசேட செயற்றிட்டத்தின் கீழ் கணிதபாட மதிப்பீட்டுப் பரீட்சை நடத்தப் படவுள்ளது.

வலயக்கல்வி அபிவிருத்திப் பிரிவினரால் நடத்தப்படவுள்ள இந்தச் செயற்றிட்டத்தின் முதலாவது மதிப்பீட்டுப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களை அந்தந்தக் கோட்ட அலுவலகங்களில் பெற்று பரீட்சை முடிந்த பின்னர் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு புள்ளியிடப்பட்ட படிவங்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்வி அலுவலக கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளரிடம் கையளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார். (117)

## வீதி திருத்தத்துக்கு நிதி மதிப்பீடு

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நவாலி வடக்கு நாச்சிமார் வீதி புனரமைப்புச் செய்வதற்கு 30 லட்சம் ரூபா நிதி தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நவாலி வடக்கு புலவர் வீதியில் இருந்து வேலக்கை வீதிவரை செல்லும் சுமார் 2 கிலோ மீற்றர் வரையான இந்த வீதி நீண்ட காலமாகப் புனரமைப்பு இல்லாமல் இருந்தது. (204-95)




## நுண்கலைப்பீட அனுமதியில் முறைகேடு: மனித உரிமை ஆணைக்குழு நிரூபித்தது:

### ஒன்பது மாணவர்களுக்கு அனுமதி

பல்கலைக்கழக அனுமதியில் இடம்பெற்ற முறைகேடு காரணமாக யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களில் 9 பேருக்கு இவ்வாண்டு முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தினர் மேற்கொண்ட விசாரணைகளில் அனுமதியில் முறைகேடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படவேண்டுமென மனிதஉரிமை ஆணைக்குழு சிபார்சு செய்தது. இதற்கமைய 9 மாணவர்கள் இவ்வாண்டு முதல் கற்கை நெறியைத் தொடங்குவதற்கு யாழ். பல்கலைக் கழகம் அனுமதியளித்துள்ளது.

இது பற்றித் தெரியவருவதாவது:

கடந்த ஆண்டு யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டதில் முறைகேடுகள் இடம்பெற்றதாக 45 இற்கும் மேற்பட்டவர்கள் கடந்த ஆண்டு மார்ச் மாதம் 10ஆம் திகதி மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்தனர். இதனையடுத்து இது தொடர்பான விரிவான விசாரணைகளை மனிதஉரிமை ஆணைக்குழு சம்பந்தப்பட்டோரிடம் மேற்கொண்டு வந்தது. இதனடிப்படையில் முறைகேடுகள் இடம்பெற்றிருந்தமை கண்டுபிடிக்கப் பட்டது.

இதனையடுத்து பாதிக்கப்பட்டவர்களில் தகுதியானவர்களுக்கு உடன் அனுமதி வழங்கப்பட வேண்டுமென மனிதஉரிமைகள் ஆணைக்குழு சிபார்சு செய்தது. அதற்கமைய பாதிக்கப்பட்டவர்களுக்கென நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பின்னர் 9 மாணவர்களுக்கு இவ்வாண்டு முதல் கற்கைநெறியைத் தொடர்வதற்கு யாழ்.பல்கலைக்கழகம் அனுமதியளித்துள்ளது. இதேவேளை, யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைக்கு இந்த வருடத்தில் பெற்ற தொகுதியிலும் முறைகேடு நடந்துள்ளதாக பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக மாணவி ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார். (8)

## ஆனைக்கோட்டையில் நீர் நிலைகளை புனரமைக்குமாறு கோரிக்கை

நவாலி, ஓக.10

ஆனைக்கோட்டை சோமசுந்தரம் வீதியிலுள்ள பொதுக்கேணி மற்றும் நன்னீர்க் கிணறு ஆகியவற்றை திருத்தி புனரமைத்துத் தரவேண்டும் என விநாயகர் சனசமூக நிலையத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக ஆனைக்கோட்டை கிராம சேவையாளர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஆகியோருக்கு சனசமூக நிலையம்மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஆனைக்கோட்டை பொதுக்கேணியில் இருந்து வயல்களுக்கு நீர் வழங்கப்பட்டு வந்தது. பொது மக்கள் மற்றும் கால்நடைகளின் பயன்பாட்டுக்கும் உதவி வந்தது.

தற்போது இந்தக் கேணி தூர்ந்துபோய்க் காணப்படுகிறது. நன்னீர்க்கிணறு பாழடைந்து மூடப்பட்டுள்ளது.

இதனால் குடிதண்ணீர் பெறுவதற்கு பொது மக்கள் சிரமம் அடைகின்றனர். கால்நடைகள் நீரின்றி அவதிப்படுகின்றன.

இக்கேணியையும் நன்னீர்க் கிணற்றையும் திருத்தியமைத்து பயன்பாட்டுக்கு வழிசெய்து தர வேண்டும் - என்றுள்ளது. (204 -100)

## சுதுமலையில் குடும்பஸ்தரை காணவில்லை என முறைப்பாடு

குடும்பஸ்தர் ஒருவரைக் காணவில்லையென மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த அமுதானந்தன் ரமேஸ்குமார் (வயது30) என்ற குடும்பஸ்தரே கடந்த 2ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இரவு 7.30 மணியளவில் கடைக்குச் செல் வதாகக் கூறிச்சென்ற இவர் பின்னர் வீடு திரும்பவில்லையென அவரது மனைவி முறைப்பாட்டில் தெரிவித்தார். (8)

## 150 கிராமசேவையாளர்களுக்கு அடுத்த மாதம் முதல் இடமாற்றம்

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்களுக்கு அடுத்த மாதம் முதலாம் திகதியில் இருந்து இடமாற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் இடமாற்ற உத்தரவுகளை யாழ். மாட்ட அரசாங்க அதிபர் வழங்கிய போதிலும் பின்னர்நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இடைநிறுத்தப்பட்டு இருந்தது.

தற்போது மீண்டும் குறிப்பிட்ட இடமாற்றங்களை அமுல் செய்யும்படி உரிய இடமாற்றக் கழகங்கள் அரசாங்க அதிபரினால் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த இடமாற்றம் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுமார் நூற்றைம் பதுக்கு மேற்பட்ட கிராம அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (1-68)

## பாராட்டு விழா

கலாசார அமைச்சினால் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட கொக்குவில் பிரம்படியைச் சேர்ந்த ச.சிவகாருண்யத்துக்கு பிரம்படி சனசமூக நிலையத்தினர் நடத்திய பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

சனசமூக நிலையத் தலைவர் தி.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ச.சிவகாருண்யத்தின் கலைச் சேவையைப் பாராட்டி பாராட்டுப்பத்திரம் வழங்கப்பட்டதோடு, பொன்னாடை போர்த்தும் கௌரவிக்கப்பட்டார். நிகழ்வில் கலைவாணன் நாடக மன்றத் தலைவர் க.பற்குணம் ஓவியச் சிற்ப ஆசிரியர் செ.வரதராசா தொழில்நுட்ப உத்தியோகத்தர் கி.வரதராஜேஸ்வரமுதலி உட்படப் பலர் கலந்துகொண்டனர். (204 -86)

## யாழ்.வலயப் பாடசாலைகளின் சஞ்சிகைப்போட்டி முடிவுகள்

வலி.வடக்கு ஓக.10

யாழ்.கல்வி வலய அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட சஞ்சிகை தயாரித்தல் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகள் அவை தயாரித்த சஞ்சிகைகளின் விவரம் வருமாறு:

**முதன்மைநிலை II** (தரம் - 3-4)

இணுவில் மத்திய கல்லூரி (காருண்யம்), வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் (பிணையல்), மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (அன்பு மழை),

**முதன்மைநிலை III** (தரம் - 5)

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம், (விழுதுகள்), சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம் (ஒளிவிளக்குகள்), மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் (பாச தீபம்)

**இடைநிலைப்பிரிவு I** (தரம் - 6-7)

சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம், (வாழ்க்கையின் செம்மை), இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி (விழுமியம்), இணுவில் மத்திய கல்லூரி (ஒழுக்க விழுப்பம்)

**இடைநிலைப்பிரிவு II** (தரம் - 8-9)

சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம் (கல்விச்சோலை), சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி (செல்வம்), கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் (ஏணி)

**இடைநிலைப்பிரிவு III** (தரம் - 10-11)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி (அமிர்த கலசம்), கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் (சொற்சுவை), சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (வேர்கள்)

**உயர்தரப் பிரிவு**

இணுவில் மத்திய கல்லூரி (கலை அமுதம்) சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி (கலை அமுதம்), இணுவில் இந்துக்கல்லூரி (கலைச் சுடர்), (204-86)

## இராணுவ வாகனத் தொடரணி செல்ல காத்து நிற்பதால் மக்கள் சிரமம்

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள பிரதான வீதிகளில் இராணுவவாகனத் தொடரணி பயணம்செய்யும்போது, ஏனைய வாகனங்கள் மணிக்கணக்காய் நிறுத்தி வைக்கப்படுகிறது என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பொதுமக்கள் இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்களிலும், தனியார் சிற்றூர்திகளிலும் அலுவலகம் மற்றும் தேவைகளுக்காக பயணம் செய்கின்றனர். வாகனத் தொடரணிகளைக் கண்டதும் வீதிகளில் பயணம் செய்யும் அனைத்து வாகனங்களும் நிறுத்தி வைக்கப் படுகின்றன. இதனால் தமக்குரிய கடமை களுக்குச் செல்வோர் உரிய நேரத்திற்கு சமுகம் அளிக்க முடியாதுள்ளதாக விசனம் தெரிவிக் கப்படுகிறது.

வாகனத் தொடரணிகள் சென்றதும் வாகனங்கள் அதிவேகமாக வீதிகளில் போட்டி போட்டுக்கொண்டு பயணம் செய்கின்றன. இதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இதனைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் சிரமம் இன்றிப் பயணஞ்செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண் டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (204-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

வவுனியா நகரில் 1320சதுர அடி அடித்தள விசாலமும் இருமாடிகள் கொண்டதும் இருபுற வழிப்பாதைகள், மின்சாரம், நீர்விநியோகம், தொலைபேசி இணைப்பு கொண்டதும் நகரின் மத்தியில் அமைந்துள்ளதுமான கடை விற்பனைக்குண்டு. தொடர்பு: 0779363150 (52883)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை, தும்பளை வீதியில் 1½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடன் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.:0773086972 (53150)

## காணி விற்பனைக்கு

கைதடி A-9 வீதியில் கைதடி வயோதிபர் இல்லத்திற்கு எதிர்ப்புறத்தில் தெற்கில் ஒழுங்கையும் மேற்கில் கண்டி வீதியும் கொண்ட 18 பரப்பு 15 குழி கொண்ட காணி ஒருமித்தோ அல்லது 4 பகுதியாகவோ விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு மாலை 5 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும் C.அருணகிரிநாதன், G.P.S. ஒழுங்கை, கல்வியங்காடு யாழ்ப்பாணம். T.P.:0776924182 (53106)

## தவறிவிட்டது

சேகர் சுதாகர் என்பவரது தொழில் அ.அட்டை (RADIANNT MARKETING (PVT) LTD) 07-08-2006 அன்று திருநெல்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் T.P.:0773215508 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (53144)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குலத்தைச்சேர்ந்த லண்டனில் நசனல்ட்டி உள்ள 1974 ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு படித்த பண்புள்ள அழகிய மணமகளைத் தேடுகிறார். தொடர்பு:T.P.:0773280594 (53131)

## சோதிடம்

சியான் அன்புஜீயின் எண்சோதிட வியாழ மாற்றப் புத்தகங்கள் நல்லூர், யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலையில் பெற்றுக் கொள்ளலாம். (53147)

# மூலஸ்தானம் புனரமைப்பு

தொல்புரம் கிழக்கு பூதராசி அம்பாள் ஆலயத்தின் மூலஸ்தானம் புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலயம் நீண்டகாலமாக புனரமைக்கப்படாது இருந்தது. தற்போது மூலஸ்தானம் புனரமைக்கப்பட்டு வர்ணம் பூசும் வேலை கள் நடைபெற்றுவருகின்றன. (204-28)

# கண்ணீர் அஞ்சலி

எமது கொழும்புத்துறை ஸ்ரீசந்திரசேகர பிள்ளையார் ஆலயத்தின் நிர்வாகசபைத் தலைவரின் அன்பு மருமகனான

**இரத்தினவேல் அகிலன்**

அவர்களது பிரிவுச் செய்திகேட்டு துயருறும் அதேவேளை அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரிற்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(53141)(26.14.19)

கொழும்புத்துறை ஸ்ரீசந்திரசேகர பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர்.

# கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவன விஞ்ஞான ஆசிரியரான
இரா. செல்வவடிவேலின் அன்புத்தாய்

**திருமதி இரா.சுப்பம்மாள்**

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நிரு கல்வி நிறுவன
ஆசிரியர்கள், மாணவர்கள்.

(53145)(26.14.19)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் குழுமத்தின் மூத்த உறுப்பினரும் பிரபல விஞ்ஞான ஆசிரியரும், சமயச் சொற்பொழிவாளருமாகிய செஞ்சொற்செல்வர்
இரா .செல்வவடிவேல்
அவர்களின் அன்பு அன்னை

**திருமதி இராமசாமிச்செட்டியார் சுப்பம்மாள்**

அமரராகி விட்டார். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவர் பிள்ளைகள், உறவினர்களுக்கு எமது ஆறுதலும், தேறுதலும். அமரரின் ஆன்மா சாந்திபெற ஞானவைரவப் பெருமானை இறைஞ்சிவேண்டுகின்றோம்.

யாழ்ப்பாணம்.
(சி/50719)(26.14.19)

யாழ்.இந்துக் கல்லூரி
பழைய மாணவர் குழுமம்.

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி நிறுவனத்தின்
விஞ்ஞான ஆசிரியர்
திரு.இரா.செல்வடிவேல்
அவர்களின் அன்புத் தாய்

**இராமசாமிச்செட்டியார் சுப்பம்மாள்**

அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு துயருறும் அதேவேளை அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

'BITSMANS'
கல்வி நிறுவன இயக்குநர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.

மானிப்பாய்.
(53126)(26.14.19)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 14 - 07 - 1926



உதிர்வு 01 - 08 - 2004

**அமரர் செல்லப்பா திருச்செல்வம்**

பந்தம் விட்டுப் போய்
இரண்டாண்டு ஆனதுவோ
சொந்தம் சொல்லி எமை
பக்கத்தில் இருந்தழைத்த
உங்கள் முகம் மறைந்து
இரண்டாண்டு ஆனதுவோ
காலம் கடந்து இங்கு
யுகம் கோடி ஆனாலும்
மாறாது தொடரும் உங்கள் நினைவு.

ஞானசம்பந்தர் வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

உங்கள் பிரிவை எண்ணி வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(சி/50725)(26.14.19)

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் A.R.ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி**

(பக்திப் பாடல் அரசு)

தோற்றம் 20.05.1940 — மறைவு 23.07.1994

ஆண்டுகள் பன்னிரண்டு ஓடி
– மறைந்தாலும்
ஆறிடுமோ எம் துயரம் அறுந்திடுமோ
– உமதன்பு?
என்றும் உங்கள் நினைவாக நித்தம்
–நாம் வாழ்கின்றோம்
இறைவன் திருவடியில் நினைவுத்
– தீபம் ஏற்றி வைப்போம்.

19/1A,
B.A. தம்பி லேன்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்.

(சி.50730) (39-14-17-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுப்படைகளின் ஆயுதக் களைவுக்கு அரசு இணங்கியமை பற்றி சபையில் சர்ச்சை

கொழும்பு, ஓக.10

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுகளின்போது கருணா குழு உட்பட துணை ஆயுதப் படைகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு அரசு இணங்கியமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி சபையில் எழுப்பிய கேள்வியால் அரசுத் தரப்புக்கும் ஐ.தே.கவுக்குமிடையே கடும்வாக்குவாதம் ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுமுன்தினம்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே. எம்.லொக்குபண்டார தலைமையில் கூடியது. வாய்மூலம் விடையளிப்பதற்கான நேரத்தின்போது ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, ஜெனீவாப் பேச்சுகளில் இலங்கை அரச படைகள் தவிர்ந்த ஏனைய ஆயுதக்குழுக்கள் ஆயுதம் வைத்திருத்தலைத் தடுப்பதற்கு அரசு உறுதிமொழி வழங்கியது. கருணா குழுவின் ஆயுதங்களைக் களைவதற்கு அரசு வழங்கிய உறுதிமொழி, எந்தெந்த ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களைய எதிர்பார்க்கப்பட்டது. ஜெனிவா பேச்சின் பின்னர் ஆயுதம் களையப்பட்ட குழுக்கள் போன்றவை தொடர்பான விவரங்களை பிரதமரும், பாதுகாப்புப் பிரதியமைச்சருமான ரத்னசிறி விக்கிரமநாயக்கவிடம் கேள்வி எழுப்பினார்.

இச்சந்தர்ப்பத்தில் பிரதமர் சபையில் இருக்காத காரணத்தால் அரச தரப்பு பிரதம கொரடா ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பதிலளிக்கையில் பல கேள்விகளுக்கு பதிலளிக்காமல் தவிர்த்தார். இதனால், எதிர்த் தரப்புக்கும், ஆளும் தரப்புக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

லக்ஷ்மன் கிரியெல்ல பேசும் போது, வெளிநாடுகளில் பேச்சு நடத்தி அந்நாடுகளின் அழுத்தங்களுக்குப் பணிந்து சம்மதம் தெரிவித்துவிட்டு நாடு திரும்பிய அமைச்சர்கள் நாட்டுப்பற்றாளர்களாக - நல்லவர்களாக - நடந்துகொள்ள முற்படுகின்றனர்; நடிக்கின்றனர்.

வெளிநாட்டுக்குச் சென்று கருணாவைக் காட்டிக்கொடுத்துவிட்டு இப்போது இல்லையென்கிறார்கள். அப்படியானால் கருணா குழுவிடமிருந்து ஆயுதங்களைக் களைய அரசு இணங்கியதாக இணைத்தலைமை நாடுகள் அறிவித்தமை பொய்யானதா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே பதிலளிக்கும்போது கூறியதாவது:-

### கருணாவை ஐ.தே.கட்சிதான் அழைத்துவந்தது

கருணாவைக் கிழக்கிலிருந்து யாருக்கும் தெரியாமல் கொழும்புக்கு அழைத்துவந்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். கருணாவை சிங்கப்பூருக்கு அனுப்பியவர்கள் ஐ.தே.கவினர். இன்று அவர்கள் கருணாவைப்பற்றி எம்மிடம் கேள்வி எழுப்புகின்றனர். கருணா குழுவினரிடமிருந்து ஆயுதங்களைக் களைந்து அவர்களை நிராயுதபாணிகளாக்க வேண்டுமென்பதா ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு.

- இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

✱ லக்ஷ்மன் கிரியெல்ல :-

ஜெனிவாவில் கருணா குழுவினரிடமிருந்து ஆயுதங்களைக் களைவதாக நீங்கள் வாக்குறுதி வழங்கவில்லையா? அப்படியானால் இணைத்தலைமை நாடுகள் கூறுவது பொய்யென்கிறீர்களா?

✱ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா:-

அரச படையல்லாத எந்தக் குழுவும் ஆயுதங்களை வைத்திருக்க அனுமதியளிக்கமாட்டோம். புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லமுடியாது. ஏனெனில், உடன்படிக்கையில் இவ்வாறுதான் கூறப்பட்டுள்ளது. நாம் செய்துகொண்ட ஜெனீவா ஒப்பந்தம் குறித்து சர்வதேச சமூகமே எம்மைப் பாராட்டியுள்ளது. எனவே, நீங்கள் இது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை.

இந்தச் சர்ச்சை 15 நிமிடங்கள் சபையில் தொடர்ந்து நடைபெற்றது. இதன் பின்னர் சபாநாயகர் சபை நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தினார். (ஐ)

# திகன கிளைமோர் குறித்து சந்தேகத்தில் அறுவர் கைது

கண்டி, ஓக.10

திகன ரஜவெலவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் பலியாகிய பொலிஸ் விசேட அதிரடிப் பிரிவின் பயிற்சி நிலையப் பணிப்பாளர் உபுல் செனவிரத்ன மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் அதிகாரி ஆகியோரின் மரணம் தொடர்பாக அறுவரை தெல்தெனியப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்கள் ஆறு பேரில் ஒருவர் வவுனியாவைச் சேர்ந்தவர் ஏனையோர் ரஜவெல, திகன மெனிக்கின்னை ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் - எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளையில், சிரேஷ்ட பொலிஸ் சுப்ரிண்டன் உபுல் செனவிரத்னவின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை கண்டி மகியாலை பொதுமயானத்தில் பொலிஸ் மரியாதைகளுடன் இடம்பெறும். (க)



நாடாளுமன்றத்திலிருந்து...

# சம்பூரிலிருந்து புலிகளை விரட்டியடித்து திருமலையைப் பாதுகாக்க வேண்டும்

## ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் சூளுரை

பயங்கரவாதத்துக்கு அடிபணியாது அரசு ஆயுதபலத்தின் மூலம் மாவிலாறு அணையைத் திறக்கவேண்டும். அதேபோன்று சம்பூர் பகுதியில் இருந்தும் புலிகளை விரட்ட வேண்டும்.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு கர்ஜித்தார் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் காலை விசேட அறிக்கையொன்றை விடுத்து அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

சம்பூரிலுள்ள புலிகளின் முகாம்கள், நிலைகளால் திருகோணமலை துறைமுகத்துக்கு பாரிய அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு முன்னர், சம்பூர், மாவிலாறு அணைக்கட்டு ஆகியன அரசின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. சாம்பூரில் புலிகள் நிலை கொண்டிருப்பது திருகோணமலைத் துறைமுகத்துக்கும், நகருக்கும் பாரிய அச்சுறுத்தலென அமெரிக்க புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இருந்தும் நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் மாவிலாறு அணைக்கட்டு, சம்பூர் பிரதேசங்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு முன்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்ததெனத் தெரிவித்துள்ளார். இவரது கூற்று அப்பட்டமான பொய்யாகும். யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு முன்னர் மாவிலாறு அணைக்கட்டுக்கு எமது பொறியியலாளர்கள் சென்று வந்துள்ளனர்.

புலிகளின் நிபந்தனைக்கு அடிபணியாமல் மாவிலாறு அணைக்கட்டைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றமை குறித்து ஜனாதிபதிக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இதேபோல் சம்பூர் பகுதியிலிருந்து புலிப் பயங்கரவாதிகளை விரட்டியடித்து திருகோணமலைத் துறைமுகத்தை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நோர்வே மற்றும் வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணியாமல் மக்கள் தேர்தலில் அரசுக்கு வழங்கியுள்ள ஆணையைப் பயன்படுத்தி பயங்கரவாதத்தை பூண்டோடு அழிக்க நடவடிக்கை எடுக்க அரசு தயங்கக்கூடாது. (ஐ)

# தமிழ் ஊடகவியலாளருக்கு போதிய பாதுகாப்பு அவசியம்

## சபையில் சம்பந்தனும் வலியுறுத்து

கொழும்பு, ஓக.20

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டும். நிமலராஜன், சிவராம், சுகிர்தராஜன் ஆகிய பிரபல தமிழ் ஊடகவியாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்படவில்லை. சிவராம் கொலை தொடர்பாகக் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த நபரொருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஊடகவியாளர்களுக்கு ஒய்வூதியம் வழங்கும் சட்ட மூல விவாதத்தில் பேசும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

யுத்த சூழலில் வடக்கு - கிழக்கிலுள்ள ஊடகவியலாளர்கள் பெரும் சிரமங்களுடன் கடமையாற்றுகின்றனர். இவர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்க வேண்டும்.

கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டமொன்றையும் அரசு கொண்டுவர வேண்டும் - என்றார். (ஐ)

# அநாமதேயத் துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு தமிழ் - முஸ்லிம் பிரிவினையைத் தூண்ட முயற்சி

## நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை விடுத்து ஹக்கீம் உரை

கொழும்பு, ஓக.10

மூதூரிலிருந்து முஸ்லிம்களை வெளியேறக் கோரும் துண்டுப் பிரசுரங்களைப் பயன்படுத்தி சில தீய சக்திகள் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்த முனைகின்றன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மூதூர் தொடர்பான எனது கருத்தைச் சில அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் திரித்து வெளியிட்டுள்ளன. மூதூரிலிருந்து புலிகளை விரட்டியடிக்கப் படையினர் மேற்கொண்ட ஷெல், ஆட்டிலறித் தாக்குதல்கள் மூலம் பல பொதுமக்கள் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

மூதூரிலிருந்து 50 ஆயிரம் முஸ்லிம்கள் தம்பலகாமம், கிண்ணியா போன்ற பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற பகுதிகளுக்கும் பலர் கொழும்புக்கும் இடம்பெயர்ந்துள்ளனர்.

புலிகள் முஸ்லிம் மக்கள் குறித்து வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. இடம்பெயர்ந்து சென்ற வயோதிபர்கள், சிறுவர்கள், பெண்கள் தாக்குதலுக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் புலிகளின் தாக்குதல்களுக்குள்ளானதாகக் கூறப்படுகிறது.

காந்திமுனைப் பகுதியில் 60 சடலங்கள் கிடக்கின்றன. தொலைநோக்கி மூலம் பார்த்தபோது இவர்களில் பலர் கைகள் கட்டப்பட்டு மிருகத்தனமாகக் கொல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் பலர் முஸ்லிம்கள் எனவும் தெரிய வருகிறது. இச்சடலங்களை மீட்டுக்கொண்டு வர செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவி கோரப்பட்டுள்ளது. இருந்தும் அவர்கள் அங்கு செல்வதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அரச கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வாழும் மக்களின் பாதுகாப்புக்கு அரசே பொறுப்பாகும். இது குறித்து அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

"யுத்தத்தைப் பொறுத்த வரை 'உண்மை' என்பதே முதலில் கொல்லப்படுவது நாம் எல்லோரும் அறிந்ததே. பல்வேறு இன்னல்களுக்கும், வசதியீனங்களுக்கும் மத்தியில் மூதூரில் இருந்து வெளியேற நேர்ந்த அப்பாவி மக்கள் விடுதலைப் புலிகளின் கரங்களினாலும், புலிகளை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு பாதுகாப்புப் படை முகாம்களில் இருந்து இடைவிடாது ஏவப்பட்ட எறிகணை, மோட்டார் தாக்குதல்களினாலும் ஏற்பட்ட பயங்கர அனுபவங்களை விபரித்திருக்கிறார்கள்.

துரதிஷ்டவசமாக இது பலர் இறப்பதற்கும், முஸ்லிம்கள் அநேகர் வெளியேற்றப்படுவதற்கும் காரணமாகும்.

இலங்கை அரச படைகளின் மட்டுப்படுத்தப்பட்ட இலக்குகளைத் தாக்கி தமது நோக்கத்தை நி[illegible] நிறுத்த உடன்படிக்கைக்கு முந்திய எல்லைகளுக்கு மீண்டு விட்டதாக விடுதலைப் புலிகள் கூறுகின்றனர். இன்று மூதூரிலும், சூழவுள்ள இடங்களிலிருந்து ஐம்பதாயிரம் மக்கள் கந்தளாய்க்குத் தப்பிச் சென்றிருக்கிறார்கள். ஏராளமான அகதிகள் குருநாகல், அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற மாவட்டங்களுக்கும் சென்ற வண்ணம் இருக்கின்றனர். கொழும்பு, கண்டி மாவட்டங்களும் இந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோரில் ஒரு தொகுதியினரை ஏற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

வெளியேறிச் செல்லும் மக்களுக்கு பச்சனூர், மூதூர் - கந்தளாய் வீதி ஆகியவற்றில் விடுதலைப் புலிகளால் ஏற்பட்ட அமானுஷ்ய செயற்பாடுகள் பற்றி விதவிதமான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. மூதூரில் வெளியேறத் தீர்மானித்த முஸ்லிம்களுக்கு எந்த விதமான பாதிப்புகளும் ஏற்படாதென்று விடுதலைப் புலிகள் உத்தரவாதம் அளித்தபோதும், அவர்களுக்கும் பல்வேறு இன்னல்கள் இழைக்கப்பட்டன. முன்னரைப் போன்றே விடுதலைப் புலிகளின் உத்தரவாதங்களை ஒரு போதும் நம்ப முடியாது.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் தொடுத்த தாக்குதல்கள் காரணமாக 48 மணித்தியாலங்களுக்கு மேலாகப் பசியாலும், பட்டினியாலும் வாடிய குழந்தைகள், கர்ப்பிணிகள் உட்பட ஏராளமான முஸ்லிம்கள் ஓகஸ்ட் 4ஆம் திகதி அதிகாலை முதலே வெளியேறியபோது விடுதலைப் புலிகளால் மூதூர் - கந்தளாய் வீதியில் 64 ஆம் மைல் கல்லில் கிராந்திமுனை ஊடாகப் பலவந்தமாகத் திசை திருப்பப்பட்டார்கள்.

அங்கு விடுதலைப் புலிகள் பிள்ளைகளையும், பெண்களையும், வயோதிபர்களையும் திடகாத்திரமான ஆண்களிலிருந்து வேறுபடுத்தி, அந்த ஆண்களைத் தடுத்து நிறுத்தி ஏனையோரைச் செல்ல அனுமதித்தனர். தடுத்து வைக்கப்பட்டோரை விடுவிக்குமாறு கெஞ்சி மன்றாடிய பெண்களையும், சிறுவர்களையும் புலிகள் அடித்துத் துன்புறுத்தியிருக்கிறார்கள்.

அந்தப் பகுதியில் பாதுகாப்புப் படையினர் தொலைநோக்கி ஊடாகப் பார்த்தபோது அறுபத்து நான்கு சடலங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையில் காணப்படுவதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல் கிடைத்துள்ளது. இந்தச் செய்தி ஊர்ஜிதப்படுத்தப்படும் பட்சத்தில் அது யுத்த நீதியை மீறிய மிலேச்சத்தனமான பாரிய போர்க் குற்றமாகப் பிரகடனப்படுத்தத் தக்கதாகும். இந்தச் சடலங்களை மீட்பதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தோம். அவற்றை மீட்டுவர மக்கள் மேற்கொண்ட முயற்சிகள் பயனளிக்கவில்லை.

மக்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறைவேற்ற உதவுவதாக அரசும், விடுதலைப் புலிகளும் கூறிவரும் வேளையில் உண்மையில் பார்க்கப் போனால், இந்த இரு தரப்பினரதும் செயற்பாடுகள் அப்பாவிப் பொது மக்களை அறவே மதியாது யுத்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதாகவே அமைகின்றன" - என்று அவர் தெரிவித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'லஞ்சீற்' பாவனைக்கு வன்னியில் தடை ஞாயிறு தொடக்கம் அமுலுக்கு வந்தது

கிளிநொச்சி,ஓக.10

**வன்னிப் பெருநிலப்பரப்பில் கிளிநொச்சியில் 'லஞ்சீற்' பாவனை செய்வதற்கு தமிழீழ சுகாதார சேவையினர் தடைவிதித்துள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் இந்தத்தடை அமுலுக்கு வந்துள்ளது.**

கடந்த சனிக்கிழமை சூழல் மேம்பாட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கொன்று தமிழீழ சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யில் நடைபெற்றது.

தமிழீழ சுகாதார சேவையினரின் ஒழுங்குபடுத்தலில் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினருடன் பொது சுகாதாரப் பரிசோதகரும் இணைந்து இந்தக் கருத்தரங்கை நடத்தினர்.

இக்கருத்தரங்கின் போது கலந்து கொண்ட உணவகங்கள், குளிர்பான நிலையங்கள்,சிற்றுண்டி, தேநீர்ச்சாலை ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கு இந்நடைமுறையைக் கடைப்பிடிக்குமாறு தெரிவிக்கப் பட்டது.

இதேவேளை- உணவகங்களில் 'லஞ்சீற்' பாவனைக்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளபோதிலும் உணவுப்பொருள் களைப் பொதிசெய்து வழங்குவதற்குத் தற்காலிகமாக 'லஞ்சீற்' பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடித்து கழிவுகளை உரிய நேரங்களில் உரிய முறைப்படி அகற்றவேண்டுமெனவும்- சுகா தார முறைகளுக்கு அமைவாக உணவுகளைக் கையாள வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டதுடன், உணவகங்களும் சுகாதார முறைப்படி பேணப்பட வேண்டுமெனக் கூறப்பட்டது.

இந் நடவடிக்கைகளைக் கையாளத் தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் இக்கருத்தரங்கின் போது தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் இணைப்பாளர் பெ.இராமலிங்கம், மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர் சோ. இரவிச்சந்திரன், பொதுச்சுகாதாரப் பரிசோதகர் கிருஷ்ணகுமார், தமிழீழ சுகாதார சேவைகள் தொற்று நோய் தடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் ஆ.தமிழ்வாணன் ஆகியோர் இந்நிகழ்வில் கருத்துரைகள் வழங்கினர். (203)

# வீதி விபத்து தொடர்பான கருத்தூட்டல் நிகழ்வு

கிளிநொச்சி நகரப் போக்குவரத்துப் பிரிவினரால் வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்தும் வகையில் வீதிப்போக்குவரத்து விழிப்புணர்வுக் கருத்தூட்டல் நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் கிளிநொச்சி புனித திரேசா கல்லூரியில் கருத்தூட்டல் நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

இதில் கிளிநொச்சி நகரப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் ஐ.சிவராசா பாடசாலை மாணவர்களுக்கு வீதி ஒழுங்கு விதிகள் பற்றிக் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

பாடசாலை முதல்வர் திருமதி ஜெயந்தினி தனபாலசிங்கம் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

மாணவர்கள் வீதியைப் பயன்படுத்துவது, வீதியைக் கடக்கும் முறைகள், விபத்துக்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முறை கள் பற்றி விளக்கங்கள் வழங்கப்பட்டன.

வீதிப் போக்குவரத்து விதிமுறைகளைப் பின்பற்றி நடப்பதன் மூலம் விபத்துக் களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும்-

சைக்கிள்களில் பக்கம் பக்கமாகச் செல்வதால் ஏற்படும் விபத்துகள் தொடர்பாகவும் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளரால் கருத்துகள் தெரிவிக்கப்பட்டது. (203-307)

# முள்ளிவாய்க்கால் கிராமத்தில் பொது மண்டபத்திற்கு அடிக்கல்

பரந்தன், ஓக.10

முல்லைத்தீவு மாவடட்ட உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தால் வடக்கு-கிழக்குக் கரையோர சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் முல்லைத்தீவிலுள்ள முள்ளி வாய்கால் கிழக்குக் கிராமத்தில் அமைக்கப்படவுள்ள பொது நோக்கு மண்டபத்திற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

நிறுவன இணைப்பாளர் துஷ்யந்தினி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெயர்ப்பலகையை 'நெக் டெப்' நிறுவனத்தின் பிரதிநிதி கிருபாகரன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

பொதுமண்டபத்திற்கான அடிக்கலினை நெக்டெப் நிறுவன திட்டமிடல் உத்தியோகத்தர் கந்தசாமி, முள்ளிவாய்க்கால் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் மற்றும் கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர் ஆகியோர் நட்டுவைத்தனர்.(203-352)

# அழிவடையும் நிலையில் கெருடமடு தீர்த்தக்கேணி

ஒட்டுசுட்டான்,ஓக.10

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கெருடமடு தீர்த்தக்கேணி புனரமைப்புச் செய்யப்படாது தூர்ந்த நிலையில் உள்ளது எனவும் எதிர்காலத்தில் அழிவடைந்து விடும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுகாதாரமற்ற முறையிலும் இக்கேணி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரசித்தி பெற்ற இந்தத் தீர்த்தக்கேணியில் தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசை தினத்தன்று பிதிர்க்கடன் தீர்ப்பது வழமை.

வற்றாத மடுவாக இருந்துவரும் இக் கெருடமடுக் கேணி புனரமைப்புச் செய்யப்படாமல் குப்பை கூழங்களுடன் மரங்கள் முறிந்து வீழ்ந்த நிலையில் உள்ளது.

அத்துடன் மழைகாலங்களில் இக்கேணிக்குள் கழிவுநீர்கள் செல்லும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இதனால் இக்கேணி அசுத்தமடைந்து மக்கள் பாவனைக்கு உதவாத வகையில் உள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கேணி புனரமைப்புச் செய்யப்படாது உள்ளமையால் எதிர்காலத்தில் கேணி இருக்குமிடமே தெரியாத அளவிற்கு அது தூர்ந்து போகும் என்று மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்து எமது பாரம்பரிய வரலாற்றுச் சான்றுகளைப் பாதுகாக்க முன்வரவேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர். (203-341)

# விதை உற்பத்தித் திட்டத்தின் கீழான முதலாவது பயறு அறுவடை யோகபுரத்தில்

பரந்தன், ஓக.10

விதை உற்பத்தித் திட்டத்தின் மூலம் மல்லாவி, யோகபுரம், புகழேந்தி நகரில் உற்பத்தி செய்யப்பட்ட பயறு அறுவடை செய்யப்பட்டுள்ளது.

கிராமிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனமும் முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களமும் இணைந்து 2006 சிறுபோகத்தில் செயற்படுத்திவரும் விதை உற்பத்தித்திட்டத்தின் கீழ் முதன்முதலாக இத்திட்டத்தை மேற்கொண்டனர்.

முன்னோடி விவசாயி ந.சிவானந்தம் என்பவரது வயலில் கடந்த முதலாம் திகதி பாண்டியன்குளம் துணுக்காய் விவசாயப் போதனாசிரியர் திருமதி புவனேஸ்வரி தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன்,விவசாயத்திணைக்கள முல்லை தீவு மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இ.கோகுலதாசன் ஆகியோர் அறுவடையைத் தொடக்கி வைத்தனர்.

நிகழ்வில் கமக்கார அமைப்பினர், இப் பகுதி விவசாயிகள், விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்கள், த.பொ.மே.நிறுவன முல்லை மாவட்டப் பொறுப்பாளர் சங்கர் மற்றும் இணைப்பாளர்கள், கிராமிய அபி விருத்தி வங்கிப் பணிப்பாளர் ப.சுஜன், விவசாயப் போதனாசிரியர்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர்.

அறுவடை விழாவில் விவசாயத் திணைக் கள உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

உதவி விவசாயப் பணிப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில் எமது பிரதேசங்களில் விதை பொருள் களுக்கு ஏற்பட்டு வரும் தட்டுப்பாட்டை நீக்கி பயிர் உற்பத்திக் காலத்தில் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விதை பொருள் கிடைப்பதற்காகவும் நல்லினவிதை மூலம் கூடிய விளைச்சலைப் பெறுவதற்கு ஏற்ற வகையிலும் இந்த விதை உற்பத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது- என்றார். (203-352)

# புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் பொதுமலசலகூடம், கிணறு இல்லை

## பொதுமக்கள் பெரும் சிரமமடைகின்றனர்

புதுக்குடியிருப்பு.ஓக.10

புதுக்குடியிருப்பு நகரப் பகுதியில் பொதுமலசலகூடம், பொதுக்கிணறு என்பன இல்லாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதிகளைச் சேர்ந்த வர்த்தகர்கள் அயலில் உள்ள தனியாரது வீடுகளுக்குச் சென்றே தண்ணீரைப் பெற்று வருகின்றனர்.

வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் பெரும் சிரமங்களை அடைகின்றனர்.

போக்குவரத்துக் கழகத்தினரின் பஸ்தரிப்பு நிலையத்தில் மலசலகூடமொன்று அமைக்கப்பட்டுள்ளது.அதுதான் அனைவரது தேவைகளுக்கும் பயன்பட்டு வருகின்றது.

நாளாந்தம் புதுக்குடியிருப்பு நகர்பகுதியில் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை யான மக்கள் வந்துபோவது வழமை. இந் நிலையில் போக்குவரத்துக் கழகத்தின் பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள மலசலகூடம் அனைவரது தேவைகளுக்கும் போதாததாக உள்ளது.

அத்துடன் இங்கு வரும் மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்வதிலும் பெரும் சிரமமடைகின்றனர்.

உரியவர்கள் இவ்விடயத்தைக் கவனத்திலெடுத்து மக்கள் அதிகம் நடமாடும் புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் மலசலகூடம் கிணறு என்பனவற்றை அமைத்துத்தர வேண்டுமென மக்கள் கேட்டுள்ளனர்.

(203-353)



கிளிநொச்சி மாவட்டமட்ட ஆங்கிலதினப் போட்டியில் சிரேஷ்ட நாடகத்தில் முதலிடம் பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர்களை அதிபர், ஆசிரியர்களுடன் படத்தில் காணலாம்.

(படம்: வட்டக்கச்சி செய்தியாளர்)

# வன்னிச் செய்திகள்

## வன்னியில் தற்காப்புப் பயிற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர் மக்கள்

கிளிநொச்சி,ஓக.10

மண்மீட்புக்காக நடத்தப்பட்டு வரும் தற்காப்புப் பயிற்சிகளில் மக்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில் மல்லாவியில் உள்ள கப்டன் யோகன் பயிற்சிப் பாசறையில் பயிற்சி பெற்றுவந்த 8 ஆவது உள்ளகப் படையணிக்கான பயிற்சி நிறைவு விழா அண்மையில் பாண்டியன்குளம் துணுக்காய் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச் சுடரை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் சு.சின்னண்ணை ஏற்றி வைக்கத் தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கப்டன் யோகனின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டு தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

அத்துடன் லெப்டினன்ட் கேணல் திருவடி பயிற்சி பாசறையின் 11 ஆவது கடற் புலிகளின் துணைப்படை அணியினருக்கான பயிற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

பயிற்சியாளர் உதயகுமார் தலைமையில் கடந்த நான்காம் திகதி இப்பயிற்சிகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

இதேவேளை - வவுனியா வடக்கிலுள்ள 2 ஆம் லெப்டினன் சுடர்வாணி, கப்டன் கஸ்தூரி பாசறையிலும் கிராமியப் பெண்கள் படைப்பயிற்சி நிறைவடைந்துள்ளது.

வவுனியா வடக்கு மதியாமடு, நயினாமடு கிராமங்களைச் சேர்ந்த பெண்கள் இப் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர்.

இளையோர் மகளிர் பயிற்சிப் பொறுப்பாளர் அன்பு தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

தமிழீழ இளையோர் படையின் முதலாவது அணிக்கான போர்ப்பயிற்சி நிறைவு நிகழ்வுகளும் கடந்த ஐந்தாம் திகதி இடம் பெற்றுள்ளன.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

(203-352-353)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்று சிறப்புகளை நினைவூட்டும் நல்லூர் பாலகதிர்காமம்



எங்கெங்கே ஓர் உண்மையான ஆன்மீக சாதுவின் சமாதியிருக்கிறதோ அங்கிருக்கும் திருக்கோயில்கள் அருள் சுரக்கும் சிறந்த ஞானபீடமாக மாறும் எனக் கூறப்படுகிறது. பாபா சுவாமிகளின் சமாதி கதிர்காமத் திலும் இஸ்லாமிய மதகுருவின் சமாதி நல்லூர்க் கந்தசுவாமி அமைந்துள்ள இடத்திலும் மற்றும் ஒரு ஞான குருவின் சமாதி செல்வச்சந்நிதியிலும் உள்ளது என்பது நாம் எல்லோரும் அறிந்ததே. இங்கெல்லாம் அடியார்கள் தம் துயரம் தீர சாந்தியடைய ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் உற்சவ காலங்களில் படையெடுக்கிறார்கள்.

தற்போதுள்ள ஸ்திரமற்ற சமூக, பொருளாதார, அரசியல் சூழ்நிலையால் அடியவர்கள் கதிர்காமத்திற்கு முன்புபோல் செல்ல இயலாதிருப்பதினை கருத்திற்கொண்டு அவர்களின் நன்மைகருதி முன்னாள் நல்லூர் கந்தசாமி கோயிலின் பிரதான குருகாலஞ்சென்ற குமாரசாமிக் குருக்கள் அவர்கள் நல்லூர் பாலகதிர்காமத்தை நிறுவத் திட்டமிட்டார். அதன்படி இன்றுவரை சிறப்பாக வருடந்தோறும் பாலகதிர்காம உற்சவமும்இறுதிநாள்களில் தேர், வேல், நவவீரர்களின் வீதியுலாவும் தீர்த்தமும் சிறப்பாக நடைபெறுகின்றன. இந்த உற்சவம் இவ்வருடம் இன்று முதல் மூன்று திணங்கள் நடைபெறும். கதிர்காமம் செல்ல இயலாத அடியார்களின் குறை இதனால் தீர்ந்தது.

யார் இந்த நவவீரர்கள்? ஆணவம், கன்மம், மாயையும் திருவுளங்களான தாரகன், சிங்கன், சூரன் தேவர்களைச் சிறையில் அடைத்தபோது எல்லாம்வல்ல சிவபெருமான் முருகப்பெருமானை உருவாக்கி அவருக்கு உதவ தளபதி வீரபாகுதேவரின் தலைமையில் இந்த நவவீரர்களை ஒழுங்குபடுத்தி அமைத்துக் கொடுத்தார். வீரபாகுதேவர் மகேந்திரபுரத்தில் இருந்த சூரனின் அரண்மனைக்குச் சென்று அவனின் ஆணவத்தை அடக்கி பின்பு சூரன் போரை நடத்தி நவவீரர்களின் உதவியுடன் வேலனுக்குத் துணை நின்ற தேவர்களை விடுவித்தார் என்பது வரலாறு. கச்சியப்ப சிவாச்சாரியார் முதன்முதலில் எழுதிய கந்தபுராணத்தில் இதற்கு ஆதாரம் உள்ளது. அந்த நவவீரர்களின் நினைவாகத்தான் பாலகதிர்காமத் தெரு உலாவில் வேலுடன் இந்த வீரர்களின் திருவுருவங்கள் எடுத்து வரப்படுகின்றன. ஒட்டக்கூத்தர் வழித்தோன்றல்கள் தான் அன்று தொடக்கம் இன்றுவரை பஞ்சபூதங்களில் அடங்கும் சிதம்பரம், காஞ்சி போன்ற கோயில்களுக்கும் மற்றும் மதுரை மீனாட்சி அம்மன், ஆறுபடை வீடுகள் உட்படப் பல பிரபல்யமான கோயில்களுக்கும் கொடி ஏற்றத்தின் அன்று கொடிச்சீலை கொடுக்கின்றார்கள். அதுமட்டுமல்லாது அந்தப் பாரம்பரியத்தில் எமது ஈழவள நாட்டிலும் நல்லூர் கந்தசுவாமி கோயில், வல்லிபுர ஆழ்வார் கோயில், மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றிற்குப் பல ஆண்டுகளாக இன்றுவரை கொடிச்சீலை கொடுக்கிறார்கள். அதன் நினைவாக சூரன்போர் அன்று முடிகாரர்களாக வேடந்தாங்கி முருகப்பெருமானுக்கு அணிவகுத்துச் செல்வார்கள். சோழ சாம்ராச்சியத்தில் இவர்களுக்கு என ஒரு தனிப்படை இருந்தது.

இப்படி வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பவங்களை நினைவூட்டும் நல்லூர் பாலகதிர்காம உற்சவத்தின் தேர், வேல், நவவீரர்களின் வீதியுலா, தீர்த்தம் ஆகியவற்றைக் கண்டு தரிசித்து நாமும் பயன்பெறுவோமாக.

அடியான்

## செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் பெருந்திருவிழா 23ஆம் திகதி ஆரம்பம்



யாழ்ப்பாணம்,ஓக.10

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய விய வருட பெரும் திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை பின்னிரவு 1.40 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளன.

அடுத்த மாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு பூங்காவனத்திருவிழாவும் இரண்டாம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு கைலாச வாகனமும் மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இந்திரவிமானமும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து ஐந்தாம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு சப்பரத்திருவிழாவும் ஆறாம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் ஏழாம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. தீர்த்தத்திருவிழாவன்று மாலை 5.30 மணிக்கு மௌனத்திருவிழாவும் நடைபெறவுள்ளது.

விசேட தினங்களைத் தவிர ஏனைய திருவிழாக்களில் காலைத் திருவிழா காலை 8 மணிக்கும் இரவுத்திருவிழா மாலை 4.30 மணிக்கும் நடைபெறவுள்ளன. (203)

## பரிசில் நாள் நிகழ்வு

வடமராட்சி கிழக்கு ஆழியவளை சி.சி.த.க. வித்தி. பரிசில் நாள் நிகழ்வு இன்று பி.ப.4 மணிக்கு வித்தியாலய திறந்த வெளியரங்கில் நடைபெறும். வித்தியாலய அதிபர் ச.திரவியராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தமும் சிறப்பு விருந்தினராக வடமராட்சி கிழக்கு உ.அ. அ. வே.வீரபத்திரபிள்ளை, மருதங்கேணி கோட்டக் கல்வி அலுவலர் த.தவேந்திரராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (1-117)

## நெடுந்தீவு நோயாளர்களின் நலன்கருதி வழங்கப்பட்ட மோட்டார் படகு செயலிழந்தது

நல்லூர்,ஓக.10

நெடுந்தீவிலிருந்து அவசர நோயாளர்களைக் கொண்டுசெல்வதற்கென 'கியூமெடிக்கா' நிறுவனத்தால் வழங்கப்பட்ட அம்புலன்ஸ் மோட்டார் படகுச் சேவையைத் தொடரமுடியாது செயலிழந்துள்ளது.

இதுவரை காலமும் சீராக இயங்கிவந்த இப்படகு ஒயில் மாற்றப்படாமையால் சேவையில் ஈடுபடமுடியாது உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் இப்படகு இயங்குவதற்கான ஒயில் மாற்றப்படவில்லை என்றும் - இம்முறையே முதல் தடவையாக ஒயில் மாற்றப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

இதேவேளை - படகுக்குரிய ஒயிலை மாற்றுவதற்கான பணியாளர்கள் கொழும்பிலிருந்து வரவேண்டியுள்ளதாலும் அவர்கள் உரிய நேரத்தில் வருவதற்குத் தாமதம் ஏற்பட்டுள்ளதாலும் அம்புலன்ஸ் படகு தனது சேவையைத் தொடரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு விழா

மட்டுவில் கலைமகள் முன்பள்ளி சிறார்களின் மெய்வன்மைப் போட்டிகள் நாளை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் நடைபெறவுள்ளன.

இளைப்பாறிய அதிபர் க.துரைரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ந.இரவிராஜ் கலந்துகொள்வார். (203-117)

## நல்லூர் ஆலயச் சூழலில் விற்பனையாகும் தின்பண்டங்கள் நாளாந்தம் பரிசோதனை

யாழ்ப்பாணம்,ஓக.10

நல்லூர் ஆலயச்சூழலில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தின்பண்டங்களும் நாளாந்தம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

நல்லூர் இந்து விடுதியில் இயங்கும் உற்சவகாலச் சிறப்புச் சுகாதாரக் குழுவின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் உற்சவ காலத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள தின்பண்டங்களின் கடை உரிமையாளர்கள் தத்தமது பிரிவுப் பிரதேச சபையினரால் வழங்கப்பட்டுள்ள உரிமங்களை உரியமுறையில் பயன்படுத்தியே கடைகளை அமைத்துள்ளனர்.

இருப்பினும் நாளாந்தம் செய்யப்படுகின்ற தின்பண்டங்களைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உரியமுறையில் பரிசோதித்து வருகின்றனர்.

இருப்பினும் ஆலயச் சூழலில் சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள தின்பண்டங்களின் விவரங்களைப் பொதுமக்கள் எமது அலுவலகத்தில் தெரியப்படுத்தினால் உரியமுறையில் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

தொற்றுநோய்கள் பரவும் அபாயம் உள்ளமையால் மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு சுகாதாரப் பிரிவினர் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர் - என்றும் தெரிவித்தார். (203-13)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று வியாழக்கிழமை வசாவிளான் ம.ம.வியைச் சேர்ந்த மகேஸ்வரராஜ் 'முருக வழிபாடு' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

அத்துடன், யாழ். இந்து ஆரம்ப [illegible] களின் கூட்டுப்பிரார்த்தனையும் இடம்பெறும். (204-111)

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

## 12ஆம் திருவிழா



### நல்லூரான் திருவடி - 06



சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாட்டைந்தும்
பூமியிற் சொன்னானெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி.

- யோகர் சுவாமிகள்.

### ஆறுபடை வீடுடைய ஆறுமுகனே...

ஆறுபடை வீடுடைய ஆறுமுகன் ஈழத்தில்
வீறுடனே வந்து விளங்குதலம் - தேறுங்கால்
அல்லும் பகலும் அடியார் தொழுகின்ற
நல்லூரா மென்றே நவில்.

- இறைமணி சி.இராசரத்தினம்

### ஒளி ஏற்று முருகா

பல்லவி

ஒளிவேண்டி வருகின்றோம் முருகா - உன்
பாதமடி பணிகின்றோம்

அனுபல்லவி

கொடியோர் செய்த வினையோ - எம்
உறவுகள் துயர் கொள்ள (ஒளி)

சரணம்

வீதி உலா வரும்போது - எம்
உறவுகள் வினை தீர்ப்பாய்
நாம்செய்த வினையறியோம் - எம்
உயிர்காக்க வேண்டுமய்யா (ஒளி)

சங்கொலியும் பேரிகையும் - எம்
தீவினையைத் துரத்துமய்யா
கற்பூரத் தீபத்தில் முருகா - எம்
உளத்திற்கு ஒளி ஏற்று (முருகா -ஒளி)

- மலர் சின்னையா

### வல்வினை போக்கிடுவாய்!

அஞ்சல் எனவருளும் அயில் வேலுடனே
தஞ்சமடையு மடியார் கூடும் நல்லூரிலே
மஞ்ஞையின் மீதமர்ந்து மயக்கும் விழிகளுடன்
வஞ்சிய ருடனிருந்து வல்வினை போக்கிடுவாய்

- குகதாசசர்மா சிவகுமார்

### நல்லவை ஓங்கிட அருளுவாய்

நல்லை நகரில் நலந்தர நன்னி
நம்பியவர்க்கு நாளும் நல்லருள் நல்கியே
எல்லை இல்லாத இணையிலா எழிலொடு
ஏறுமயில் ஏறியே அடியவர்க்கு அருளவே
தொல்லை துடைத்தே துயர் தீர்க்கவென
தோன்றிய முகங்கள் ஆறும் கொண்டே
ஒல்லையில் அல்லவை தேய்ந்து நல்லவை
ஓங்கிட அருளுவான் அலங்காரக் கந்தனிவன்!

- பொன்.சுகந்தன்

### நல்லூரானே வழிகாட்டு!

நல்லருள் தருவாய் நல்லூரானே! உன்னை
நாடி நிற்கும் எம் துயர் தீர்ப்பாய்
ஓடோடி வருவாய் நல்லூர்க் கந்தா
தேடித் தேடி வருவோம் உன் தலம் என்றும்
பாடிப்பாடி உருகும் எமக்கு வழி காட்டு.

- கொற்றாவத்தை வ.காந்திமதிநாதன்.

விழா சிறப்புற
வாழ்த்துவோர்:

விதம் விதமான றெடிமேட் ஆடைகளின்
குளிரூட்டப்பட்ட
சாம்ராஜ்ஜியம்

கிறீன்பலஸ் எம்போறியம்

பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

(சி/50027) (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்பந்த அடிப்படையிலான மீள்நியமன விண்ணப்பம் கோரல் - 2007

### சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பிரிவு - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் பிரிவில் உள்ள வைத்தியசாலைகளில் உள்ள வெற்றிடங்களிற்கு ஒப்பந்த அடிப்படையில் மீள்நியமனத்தில் 2007ஆம் ஆண்டு காலத்தில் கடமையாற்றுவதற்கு பின்வரும் பதவிகளிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வைத்திய உத்தியோகத்தர்
2. பதிவு வைத்திய உத்தியோகத்தர்/உதவி வைத்திய உத்தியோகத்தர்
3. மருந்தாளர்
4. ஆய்வுகூட தொழில்நுட்ப உத்தியோகத்தர்
5. தாதிய உத்தியோகத்தர்
6. குடும்ப சுகாதார உத்தியோகத்தர்
7. ஊடுக கதிர்ப்படப் பிடிப்பாளர்
8. பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்
9. மருந்துக் கலவையாளர்

விண்ணப்பிக்க விரும்புவோர் 12.09.2006ஆம் திகதிக்கு முன்னர் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பின்வரும் ஆவணங்களின் நான்கு பிரதிகளுடன் விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. ஓய்வூதியக் கொடைப் பத்திரம்
2. இறுதியாகப் பெற்றுக்கொண்ட சம்பளப் படிநிலையில் கடமையாற்றுவ்தற்கான சம்மதக் கடிதம்
3. சமாதான நீதிவானின் நற்சான்றிதழ்
4. மருதங்கேணி உட்பட யாழ்.மாவட்டத்தின் எப்பகுதியிலும் கடமையாற்றுவதற்கு சம்மதக் கடிதம்
5. தற்போதைய உடல், உள நிலைபற்றிய மருத்துவ உத்தியோகத்தர்களின் சான்றிதழ்
6. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
7. 60 வயதிற்கு உட்பட்டவரெனில் தனது ஓய்வூதியத்தை உறைநிலையில் வைப்பதற்கான சம்மதக் கடிதம்

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்,**
*பிரதி மாகாணப் பணிப்பாளர்,*
*சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.*

(சி/507180)
(32.11.14.26)

## தளபாடக்கொள்வனவுக்கு சுரேஷ் எம்.பி.நிதி ஒதுக்கீடு

மாதகல் புனித தோமையார் சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் கொள்வனவு செய்வதற்காக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 25 ஆயிரம் ரூபாவை இவ்வருட பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் (வரைவுள்ளது)

### பதவி வெற்றிடம்

#### களஞ்சியப் பொறுப்பாளர்

1. சம்பள குறியீட்டு இல. :202/13
2. சம்பளத் திட்டம் :7750/- 75-- 10-80 10 - 9300/-
3. வயது எல்லை : 25 தொடக்கம் 45 வரை
4. விண்ணப்ப முடிவு திகதி: 25.08.2006
5. பிணை : ரொக்கம் ரூ.15000/-
   : ஆதனம் ரூ.25000/-
   அல்லது
   ரொக்கம் ரூ.15000/-
6. 1. சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
   2. சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.
   3. வேறு சங்கங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
7. தகைமைகள்:
   1. கூட்டுறவுப் பணியாளர் 202/14 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட பகுதியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 202/15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட பகுதியில் 4 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

   அல்லது

   கூட்டுறவுப் பணியாளர் சா.தரம் சித்தி அல்லது க.பொ.த. (சா.தர.) தமிழ், கணிதம்/ வர்த்தக கணிதம்/ எண்கணிதம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும், மேற்குறித்த பதவியில் 2 வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.
8. விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம், ஊர்காவற்றுறை" என்ற முகவரிக்கு நேரிலோ, பதிவுத்தபாலிலோ 25.08.2006 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

**ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்,** **- பொது முகாமையாளர்.**
**ஊர்காவற்றுறை.**

(சி/50721)(26.19.14)

## கோப்பாயில் மாடுகளுக்கு தடுப்பு மருந்து

அச்சுவேலி,ஓக.10

கோப்பாய் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய் தடுப்புமருந்து ஏற்றப்படவுள்ளது என கோப்பாய் பிரிவு கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

தடுப்புமருந்து ஏற்றப்படவுள்ள நாள், இடம் பற்றிய விவரம் வருமாறு:

எதிர்வரும் 14 ஆம் திகதி சிறுப்பிட்டி மடத்தடி, சிறுப்பிட்டி மேற்கு -

15 ஆம் திகதி புத்தூர் குருநாதர் கோயிலடி, புத்தூர் குருபரன் சனசமூக நிலையம் -

16ஆம் திகதி ஆவரங்கால் சிவன் கோயிலடி, ஆவரங்கால் சர்வோதயம் -

17ஆம் திகதி பத்தமேனி பிள்ளையார் கோயிலடி, நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையம் -

18 ஆம் திகதி வாதரவத்தை. (204-11)

## பிரிவுபசார விழா

தென்மராட்சி,ஓக.10

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடமையாற்றி இளைப்பாறிய உபஅதிபர் கு.ஜெயானந்தனுக்கு அண்மையில் கல்லூரி ஆசிரிய சகோதரத்துவ மன்றத்தினால் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது.

கல்லூரி மண்டபத்தில் மன்றத் தலைவர் க.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை பிரதி அதிபர் க.பத்மகாந்தன் உட்படப் பலர் இளைப்பாறிய அதிபரின் சேவையைப் பாராட்டி உரையாற்றினர்.

இலங்கை அதிபர் சேவை தரம் I ஐச் சேர்ந்த இவருக்கு மன்றத்தினால் பொற்கிளி வழங்கிக் கௌரவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (117)

## பொதுநோக்கு மண்டபம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,ஓக.10

நியாப் திட்டத்தின் கீழ் வட்டுக்கோட்டை தெற்கில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத்திறப்பு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

செம்பாட்டான் தோட்டம் அம்பாள் சனசமூக நிலையத் தலைவர் த.சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் கோப்பாய்ப் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ்.செயலக நியாப் பிரதித் திட்டப் பணிப்பாளர் க.பாலகிருஷ்ணன், சங்கானை உதவிப் பிரதேச செயலர் திருமதி பாபுதேவந்தினி ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர். (204)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தின் முன்பள்ளி விளையாட்டு விழாக்கள்

யாழ்ப்பாணம்,ஓக.10

வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளி மேம்பாட்டு நிலைய சண்டிலிப்பாய் பிரதேசத்தின் ஏற்பாட்டில் இந்தப் பிரதேச முன்பள்ளிகளின் விளையாட்டு விழாக்கள் நடைபெறவுள்ளன.

மாதகல் குடும்ப முன்பள்ளியின் விளையாட்டு விழா எதிர்வரும் 18ஆம் திகதி காலை 8.30 மணிக்கு மாதகல் தேவாலய வளாகத்திலும்-

பண்டத்தரிப்பு குடும்ப முன்பள்ளியின் விளையாட்டு விழா எதிர்வரும் 19ஆம் திகதி காலை 8.30 மணிக்கு வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்க வளாகத்திலும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை - சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 60 முன்பள்ளிகள் செயற்பட்டு வந்தன. அவை தற்போது 8 முன்பள்ளிகளாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளன என்று சண்டிலிப்பாய் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையச் செயலாளர் தெரிவித்தார். (204)


IIS CITY CAMPUS

A/L 2006 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே ! உங்களுக்காகவே !!

BTEC HND இக்கல்வியாண்டுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபலபல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் (. Admission ) உயர்கல்விக்கான Visaக்களைப் பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் B.Sc (Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப் பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visaக்களையும் உறுதிசெய்கின்றது.



**கணனித்துறையில் பட்டப்படிப்பு**

நீங்கள் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்தவரா? ஆம் எனில் இச்சந்தர்ப்பத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள். *Edexcel* International நிறுவனத்தின் BTEC HND (Higher National Diploma) பயிற்சி நெறியில் இணைந்து கொண்டு சர்வதேச தரம் வாய்ந்த B.Sc (Hons) பட்டப்படிப்பினைத் தொடரமுடியும்..

**சர்வதேச சான்றிதழ்கள்**

BTEC HND (Higher National Diploma) என்பது கணனித்துறையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரப் பயிற்சிநெறியாகும். 18 மாதகாலப் பயிற்சியின் முடிவில் பிரிட்டனின் *Edexcel* இன் சர்வதேச டிப்ளோமா சான்றிதழ்களை நீங்கள் பெறுவீர்கள். *Edexcel* என்பது லண்டன் ஜீ.சீ.ஈ. சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்கான உலகளாவிய ஆளுநர் சபையாகும்.

**வெளிநாட்டில் படிப்பைத் தொடரலாம்**

IIS நிறுவனத்தில் BTEC HND (Higher National Diploma) பயிற்சிநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகவே பிரிட்டன், ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களின் B.Sc (Hons) இறுதியாண்டு மாணவராகச் சேர்ந்து பட்டப்படிப்பை மேற்கொள்ளலாம். இதன் மூலம் பொருளாதார ரீதியாக நன்மை அடையமுடியும்

**தேசிய மற்றும் சர்வதேச புலமைப்பரிசில்கள்**

IIS நிறுவனத்தில் திறமைமிக்க மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படும். அதிவிசேட திறமை காண்பிக்கும் மாணவர்களுக்கு பிரிட்டனிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

BTEC HND
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

B.Sc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK, USA, Australia, Canada etc.

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1½ years )

GCE A/L
with 2 Subjects

edexcel INTERNATIONAL
Approved Training Centre



ந. சுமங்கலா - கொக்குவில் - (HND 4ம் பிரிவு மாணவி)

க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுடன் 3ம் நிலைக் கல்வி பற்றி தெளிவான விளக்கமின்றி நான் இருந்தவேளையில் IIS இனால் நடாத்தப்படும் HND பற்றிய விபரம் பத்திரிகை ஊடாக எனக்குக்கிட்டியது. உடனடியாக எவ்வித தயக்கமுமின்றி கற்கைநெறியில் இணைந்து கொண்டேன். சர்வதேச அங்கீகாரம் உள்ளHND கற்கை நெறியினை குறுகிய காலத்தில் எமது சொந்த மண்ணிலேயே பெற்றோரின் அரவணைப்பில் இருந்து கொண்டே தொடரக் கிடைத்திருப்பது மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்..

முதல் மூன்று பிரிவு மாணவர்களும் சிறப்பாக HND கற்கைநெறியை முடித்து வெளியேறியுள்ளமை IIS இன் மகத்தான சேவையினையும் நம்பகத் தன்மையையும் எடுத்துக்காட்டுகிறது. எம் போன்ற மாணவர்களுக்கு தக்க தருணத்தில் இவ்வரிய சந்தர்ப்பத்தை வழங்கிய IIS நிறுவனத்தினை எண்ணி நானும் எனது பெற்றோரும் பெருமைப்படுகிறோம்.

IIS CITY CAMPUS உங்கள் எதிர்காலத்திற்கு ஓர் தக்க முதலீட்டைத் தேடிக்கொடுக்கின்றது

IIS CITY CAMPUS
"SUCCESS THROUGH KNOWLEDGE"
# 200, Sivan Pannai Road, Jaffna
T.P : 021 222 8060 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk



IBMS
Computer Courses
புதிய பிரிவு ஆரம்பம்
12.08.2006 பகல் 10.00 மணி

Head Office : # 209, Manipay Road, Vaitheeswara Junction, Jaffna.
T.P. No. : 021 222 8232
Branches : • NMMV Road, Nelliady
• Sangaththanai, - Chavakachcheri


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்லாவைத் தீவிரவாதி என வர்ணித்தமை: டீன் ஜோன்ஸ் பணிநீக்கம் செய்யப்பட்டார்

## 'ரென் ஸ்போட்ஸ்' தொலைக்காட்சி அதிரடி நடவடிக்கை


டீன் ஜோன்ஸ்

கொழும்பு,ஓக..10
தென்னாபிரிக்க வீரர் ஹசிம் அம்லாவைத் 'தீவிரவாதி' என வர்ணித்த பிரபல கிரிக்கெட் வர்ணனையாளர் டீன் ஜோன்ஸை ரென் ஸ்போட்ஸ் தொலைக்காட்சி பணி நீக்கம் செய்துள்ளது. இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்கா அணி 2 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்றது. இரண்டாவது டெஸ்ட் போட்டி கொழும்பில் நடந்தது. இப்போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் களமிறங்கிய இலங்கை அணியின் முன்னணி வீரரான சங்ககரீர, போலக்கின் பந்துவீச்சைப் பவுண்ரிக்கு விளாசினார்

ஆனால், அதை அபாரமாகப் பிடி எடுத்தார் தென்னாபிரிக்க வீரர் ஹசிம் அம்லா. அப்போட்டியின் வர்ணனையாளராக இருந்த ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் டீன் ஜோன்ஸ், "இலங்கையின் மற்றொரு விக்கெட்டை வீழ்த்தி விட்டார் தீவிரவாதி -" என்றார். இது தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்கு மட்டுமன்றி, அவர் வர்ணனையாளராகப் பணிபுரியும் 'ரென் ஸ்போர்ட்ஸ்' நிறுவனத்துக்கும் பெரும் பிரச்சினையைக் கிளப்பியது. இதுகுறித்து தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை தலைமை நிர்வாக அதிகாரி ஜெரால்ட் மயோலா கூறுகையில்," ஜோன்சின் தவறான வர்ணணை இனவெறியைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது. அவர் மீது உடனடியாக சர்வதேச கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்"-என்றார்.

தனது வர்ணனை குறித்து ஜோன்ஸ் கூறுகையில்," நான் எந்தவித தவறான நோக்கத்துடனும் இதைத் தெரிவிக்கவில்லை. நான் முஸ்லிம் சமுதாயத்தின் மீது நன்மதிப்பு வைத்திருப்பவன். பாகிஸ்தானைச் சேர்ந்த அனைத்து வீரர்களுடனும் நட்புடன் பழகிவருபவன். நான் கூறிய வார்த்தைகள் தவறானவைகளாக இருந்தால், மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன்" - என்றார்.

இப்பிரச்சினையின் காரணமாக 'ரென் ஸ்போர்ட்ஸ்' நிறுவனம் ஜோன்சை வர்ணனையாளர் பணியில் இருந்து நீக்கியுள்ளது. இது குறித்து ரென் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் தலைமை அதிகாரி ஜூட் டி வல்லியர் கூறுகையில்," தவறான வார்த்தைகளால் வர்ணனை செய்த ஆஸ்திரேலியாவின் டீன் ஜோன்சின் வர்ணனையாளர் ஒப்பந்தம் ரத்து செய்யப்படுகிறது. அவர் ஆஸ்திரேலியா திரும்பி விட்டார்," - என்றார். மேலும் பாதிக்கப்பட்ட ஹசிம் அம்லா, தென்னாரிக்க கிரிக்கெட் சபை, இலங்கை கிரிக்கெட் மற்றும் சர்வதேச கிரிக்கெட் சபை ஆகியவற்றிடம் ரென் ஸ்போட்ஸ் நிறுவனம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டுள்ளது. ரென் ஸ்போட்ஸின் அதிரடி நடவடிக்கைக்குத் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை வரவேற்பும் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளது. (8)



அம்லா

# தொடரை வென்றது இங்கிலாந்து!

ஹெடிங்லி,ஓக.10
பாகிஸ்தானுக்கு தங்களது சொந்த மண்ணில் இங்கிலாந்து மரண அடி கொடுத்துள்ளது. மூன்றாம் டெஸ்டில் 167 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை 2-0 எனக் கைப்பற்றியுள்ளது. பனேசர், மகமூத் கூட்டணி பாகிஸ்தானைக் கலங்கடித்தது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நான்கு டெஸ்ட் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. மூன்றாம் டெஸ்ட் வீட்சில் நடந்தது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 515, பாகிஸ்தான் 538 ஓட்டங்கள் எடுத்தன. நான்காம் நாள் ஆட்ட நேர இறுதியில் இங்கிலாந்து இரண்டாம் இன்னிங்சில் 345 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இதையடுத்து பாகிஸ்தானுக்கு வெற்றி இலக்காக 323 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது.

ஐந்தாம் நாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் நடந்தது. முதல் ஓவரை வீசி ஆஸியின் பனேசர் ஆச்சரியம் தந்தார். அதன் பின்னர் ஹோகர்ட், ஹார்மிசன் பொறுப்பை எடுத்துக் கொண்டனர். ஹோகர்ட்டின் பந்துகளைப் பவுண்டரிக்கு விரட்டி அமர்க்களமாக சல்மான் பட் ஆட்டத்தை ஆரம்பித்தார். ஆனால், அவரை 16 ஓட்டங்களுடன் வெளியேற்றி ஹோகர்ட் பழி தீர்த்துக்கொண்டார். இதையடுத்து உமரும் (11) ஆட்டமிழந்தார்.


வெற்றிக்களிப்பில் இங்கிலாந்து வீரர்கள்.

தொடக்க வீரர்கள் ஆட்டமிழந்ததையடுத்து யூசுப், யூனிஸ் கான் ஜோடி சேர்ந்தனர். யூனிஸ்கான் பந்தைத் தட்டிவிட்டு ஓர் ஓட்டம் எடுக்க முற்பட, மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்த கோலிங்வுட் துல்லியமாகப் பந்தை விக்கெட்டை நோக்கி எறிந்து யூசுப்பை ஆட்டமிழக்கச் செய்தார். யூசுப் ஆட்டமிழந்தாலும், யூனிஸ் மறுமுனையில் ஓட்டங்கள் குவித்தார். அடுத்து வந்த பைசல் இக்பால் (11) கம்ரான் அக்மல் (0) பெரிதாக எதுவும் சாதிக்கவில்லை. நான்காம் நாளன்று களத்தடுப்புச் செய்யாததால் இன்சமாம் ஏழாவது வீரராகக் களமிறங்கினார். இதையடுத்து அணியை மீட்கும் பொறுப்பு இன்சமாம், யூனிஸ் தலையில் விழுந்தது. 41 ஓட்டங்கள் எடுத்த நிலையில் யூனிஸ், பனேசர் சுழலில் ஆட்டமிழக்க பாகிஸ்தான் தோல்வி ஏறக்குறைய உறுதியானது.

தோல்வியின் பிடியில் சென்றுகொண்டிருந்த பாகிஸ்தானைக் கரைசேர்க்க அணித் தலைவர் இன்சமாம் முயற்சி செய்தார். ஆனால், இவருக்கு மறுமுனையில் ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. இறுதியில் பாகிஸ்தான் 155 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது. இங்கிலாந்து சார்பில் பனேசர், மகமூத் முறையே 3,4 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதனால் இங்கிலாந்து அணி 167 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தொடரை வென்றது. (8)

## 44ஆவது இடத்தில் சானியா



புதுடில்லி,ஓக.10
பெண்களுக்கான ரென்னிஸ் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச ரென்னிஸ் கூட்டமைப்பு நேற்றுமுன்தினம் வெளியிட்டது. இதில் இந்தியாவின் இளம் ரென்னிஸ் புயல் சானியா மிர்சா 44 ஆவது இடத்தைக் கைப்பற்றினார். சமீபத்தில் சான்டியாகோவில் நடந்து முடிந்த 'அகுரா கிளாசிக்' ரென்னிஸ் தொடரில் மூன்றாவது சுற்று வரை முன்னேறினார் சானியா. இருப்பினும் அவரது தரவரிசையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. சானியா தொடர்ந்தும் 44ஆவது இடத்திலேயே நீடிக்கிறார். இத்தொடரின் இரட்டையர் பிரிவில் காலிறுதியில் தோல்வியுற்றார் சானியா. இதன் காரணமாக 31 ஆவது இடத்திலிருந்த அவர், 32 ஆவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளார். (8)

விளையாட்டு

# பங்களாதேஷ் ஆறுதல் வெற்றி!

சிம்பாப்வேயிற்கு எதிரான ஒருநாள் தொடரை ஏற்கனவே இழந்த பங்களாதேஷ் அணி, ஐந்தாவது ஆட்டத்தில் வெற்றிபெற்று ஆறுதல் அடைந்தது. 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 198 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை அடைந்து வெற்றியிலக்கைத் தனதாக்கியது பங்களாதேஷ்.

ஆரம்பவீரர் சஹாரியார் நபீஸ் ஆட்டமிழக்காமல் 118 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்குப் பேருதவி புரிந்தார். இது ஒருநாள் ஆட்டங்களில் அவரது கன்னிச் சதமாகும்.

5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றுவதற்காகச் சிம்பாப்வே சென்ற பங்களாதேஷ் அணி முதல் நான்கு ஆட்டங்களிலும் ஒன்றில் மட்டுமே வெற்றி பெற்றிருந்தது. ஏற்கனவே மூன்று ஆட்டங்களில் வெற்றிபெற்ற சிம்பாப்வே தொடரையும் தனதாக்கியிருந்தது. இந்நிலையில் இவ்விரு அணிகளிற்குமிடையிலான ஐந்தாவது ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹாரோயில் நடைபெற்றது.

இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது. ராஜின் சாலே 16 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன் ஒருநாள் ஆட்டங்களில் தனது சிறந்த பெறுபேற்றையும் பெற்றார். சிம்பாப்வே சார்பாக மஸகட்ஸா 75 ஓட்டங்களைப் பெற்றார்.

வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷிற்கு ஆரம்ப வீரர்கள் சிறப்பான அடித்தளமிட்டனர். பந்துவீச்சில் பிரகாசித்த ராஜின் சாலே துடுப்பாட்டத்தில் 37 ஓட்டங்களைப் பெற்றார். அவர் முதல் விக்கெட்டில் நபீஸுடன் சேர்ந்து 99 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றார். இறுதிவரை ஆட்டமிழக்காமலிருந்து நபீஸ் 118 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து அணியை வெற்றி பெறச் செய்தார்.



தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின் இரண்டு ஆட்டங்களிலும் இலங்கை அணி வெற்றிபெற்றது. தொடரை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றிய மகிழ்ச்சியில் வீரர்களும், பயிற்சியாளர் மற்றும் அதிகாரிகளும்.....

# மினி உலகக்கிண்ணத் தொடருக்கான உத்தேச இலங்கையணி அறிவிப்பு!

கொழும்பு,ஓக.10
மினி உலகக்கிண்ணத்தொடரிற்கான 30 வீரர்கள் கொண்ட உத்தேச இலங்கையணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அவிஸ்க குணவர்த்தன மற்றும் சமன் ஜெயந்த ஆகியோரும் இணைக்கப்பட்டுள்ளனர். அத்துடன், மாவன் அத்தபத்துவும் இத்தொடரில் பங்குபற்றவுள்ளார்.

மினி உலகக் கிண்ணத் தொடர் எதிர்வரும் ஒக்ரோபர் 14ஆம் திகதி முதல் நவம்பர் 7ஆம் திகதிவரை இந்தியாவில் நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் இலங்கையணியின் 30 வீரர்கள் கொண்ட பட்டியலை ஸ்ரீலங்கா கிரிக்கெட் வெளியிட்டுள்ளது.

இலங்கையணியில் தற்போது ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக விளங்கும் ஜெயசூரிய மற்றும் உபுல் தரங்க ஆகியோர் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். இந்நிலையில் இவர்களுக்கு உபாதைகள் ஏதும் ஏற்படின் அதனை நிவர்த்தி செய்யும் விதமாக அவிஸ்க குணவர்த்தன மற்றும் சமன் ஜெயந்த ஆகியோர் பயிற்சி அணிக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, முதுகுப் பகுதியில் ஏற்பட்ட காயத்திலிருந்து மீண்டு வந்துள்ள அத்தப்பத்து எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முத்தரப்பு ஒருநாள் தொடரில் இணைக்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள உத்தேச அணி:-
மார்வன் அத்தபத்து, சனத் ஜெயசூரிய, உபுல் தரங்க, அவிஸ்க குணவர்த்தன, சமன் ஜெயந்த, குமார் சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ண டில்சான், சாமர ஹப்புக்கெதர, ஜெகான் முபாரக், ரஸல் ஆர்னல்ட், பிரசன்ன ஜெயவர்த்தன, ஜீவன் மெண்டிஸ், பர்வேஷ் மஹ்ரூப், சமிந்தவாஸ், ருச்சித பெரேரா, டில்கார பெர்ணான்டோ, நுவான் சொய்ஸா, லசித் மாலிங்க, நுவான் குலசேகர, தம்மிக்க பிரசாத், அஹலங்க ஹனீகம, லொக்கு ஹெட்டிகே, முரளிதரன், ரங்கன ஹேரத், மலிங்க பண்டார, லொக்குவாராட்சி, சஜிவ வீரக்கோன், உபுல் சந்தன, [illegible] (8)

## அன்டி மூரே தோல்வி!



வாஷிங்ரன், ஓக.10
அமெரிக்காவின் வாஷிங்ரன் நகரில் இடம்பெற்றுவந்த லெக் மேஷன் கிளாசிக் ரெனிஸ் தொடரின் இறுதியாட்டத்தில் பிரிட்டன் வீரர் அன்டி மூரே அதிர்ச்சித் தோல்வியடைந்து பட்டம் பெறும் வாய்ப்பை இழந்தார். இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற பிரான்ஸ் வீரர் ஆர்னட் சிலிமென்ற் தொடருக்கான ஏ.ரி.பி. பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் 7:6, 6:5 என்ற நேர் செற்கணக்கில் மூரேயை வீழ்த்தி சிலிமென்ற் பட்டம் வென்றார். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6ஆவது பிறந்தநாள் வாழ்த்து

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த
**திரு.திருமதி ரவிக்குமார் - மயூரதி தம்பதியரின் செல்வப் புதல்வன் நிதுஷன்**
தனது 6ஆவது பிறந்தநாளை இன்று (10.08.2006) வியாழக்கிழமை தனதில்லத்தில் கொண்டாடுகிறார்.
இவரை லெபனானில் வசிக்கும் அன்பு அம்மா மயூரதி, கண்ணன் மாமா குடும்பம், ஆனைக்கோட்டையில் வசிக்கும் ஆசை அண்ணா யானுஷன், தாத்தா, அம்மம்மா, சுதா மாமா குடும்பம், சசி மாமா குடும்பம், பூநகரியில் வசிக்கும் அப்பம்மா, அத்தை, சித்தப்பா குடும்பம், லண்டனிலுள்ள குமார் மாமா குடும்பம், ஜேர்மனியிலுள்ள மகேஸ் பெரியம்மா குடும்பம், யோகா பெரியம்மா குடும்பம், சுசி அக்கா குடும்பம், சர்மிலன் அண்ணா குடும்பம், இத்தாலியில் வசிக்கும் சங்கி அண்ணா, பகரேனிலுள்ள அழகேஸ்வரியம்மா, உதயன் மாமா குடும்பம், ஜேனோ அத்தான், ரவி மாமா குடும்பம், இந்தியாவிலுள்ள குஞ்சுக்கனி மாமா குடும்பம் மற்றும் வவுனியாவிலுள்ள அம்மம்மா, ஜெகா பெரியம்மா குடும்பம், சித்ரா அக்கா, சனா அண்ணா, யாழ்ப்பாணத்திலுள்ள தாத்தாமார், அம்மம்மாமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், அத்தைமார், அக்காமார், அண்ணாமார், தம்பிமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சிறிவாதவிக்னவிநாயகர் அருள் பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.






(53132) (24)

சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
சின்னத்துரை பூரணம்.

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக.10

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலைய முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழா முன்னர் கடந்த 6ஆம் திகதி நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டிருந்ததாக சனசமூக நிலையத் தலைவர் த.பேரின்பநாயகம் தெரிவித்தார். (204)

# 21ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 10 - 02 - 1956

விண்ணில் 10 - 08 - 1985



**திருமதி கமலாதேவி சுப்பிரமணியம்**
(ஆசிரியை, றோ.க.பாடசாலை, கோப்பாய் தெற்கு)

ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுமாய்
இருபத்தியொரு ஆண்டுகள் உருண்டதம்மா
எங்களின் துயரம் ஆற்றிட வழியில்லை
இதயம் உருகிட அஞ்சலி செய்தோம்.

கிறிஸ்தவக் கல்லூரி முன்பாக,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (53123)(32-17-15)

பிரிவால் துயருறும்:
கணவர்- சுப்பிரமணியம்,
மகன் - சுதர்ஸன்.

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஒய்வுபெற்ற ஆசிரியரும்
ஆசிரிய சங்க உறுப்பினருமாகிய

**L.M.Ferdinand**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(53134)
(32-17-15)

## திருத்தம் செய்யப்படாத ஆனைக்கோட்டை வீதி

நவாலி, ஓக.10

ஆனைக்கோட்டை யாவில் குளத்துக்குச் செல்லும் வீதி பாரிய சேதமடைந்து காணப்படுகிறது. இதனால் இவ்வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமம் அடைகின்றனர்.

சிரமம் இன்றி பயணஞ்செய்ய இவ்வீதியைத் திருத்தித் தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (204-100)


## நவாலி வடக்கின் பல இடங்களில் மின்சாரம் இல்லை

யாழ்ப்பாணம், ஓக.10

நவாலி வடக்கு, ஊட்டுக்குழி, வரகு சாட்டி, பெத்தனாச்சியார் ஆலய வீதியில் வசிக்கும் மக்களுக்கு இதுவரை மின்சார வசதி ஏற்படுத்திக்கொடுக்கவில்லை.

இப்பகுதி கடந்த 50 வருடங்களாக மின்சாரப் பயன்பாடு இன்றி இருக்கிறது. மின்சாரம் வழங்குமாறு இலங்கை மின்சார சபையின் வடக்குப் பிராந்திய முகாமையாளருக்கு பல தடவைகள் கடிதங்கள் எழுதப்பட்டன. எனினும் இன்னும் மின்சாரம் வழங்குவதற் கான எதுவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என இப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (204-95)

# ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



**அமரர் சி.வைரவிப்பிள்ளை**
(ஓய்வுபெற்ற அதிபர்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27✱03✱1925 | 06✱08✱2001 |

திதி: ஆடி அபர துதியை
(10.08.2006)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு
இல்லத்தில் வழிகாட்டி நின்றவரே!
காலத்தால் நாமும்மைப் பிரிந்தாலும்
ஞாலத்தில் தொடரும் உம் நினைவலைகள்.

சரசாலை. (சி/50726)(32-17-15) குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 01 - 01 - 1930

மறைவு 11 - 07 - 2006



அமரர்
**செல்லையா செல்வரட்ணம்**
[Rtd, Area Auditor (S.L.R.T.B)]

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று (10-08-2006) வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது மகனின் இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வைபவத்திற்கு தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால், புத்தூர். (53140) (32-26-17-15)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## வேலணை கிராமத்தில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம், ஓக.10

தீவக லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில், வேலணை சின்னமடுக் கிராமத்தில் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று லயன்ஸ் கழகத் தலைவர் கு.கங்கைவேணியன் தெரிவித்தார்.


இத்திட்டத்தில் முதற்கட்டமாக இப்பிரதேசத்தில் உள்ள கற்றலில் பின்னடைவான மாணவர்களுக்கு எழுத்தறிவூட்டல் வகுப்புகள் மற்றும் தொடர்பாடலுக்குத் தடையாக உள்ள ஆங்கில மொழியை மேம்படுத்தும் வகுப்புகள் என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

இவை தவிர இக்கிராமத்தில் வீடுகள் புனரமைப்பு, சுகாதாரத்தை மேம்படுத்தல், குடிதண்ணீர் பெற்றுக்கொடுத்தல், மருத்துவக் கல்வி, தொழில் வழிகாட்டல் கல்வி, வீதிப் போக்குவரத்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு, தலைமைத்துவப் பயிற்சி என்பனவற்றை வழங்கவும் அதனைச் செயற்படுத்தவும் நிதி சேகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று லயன்ஸ் கழகத் தலைவர் மேலும் தெரிவித்தார். (204)

# ஓராண்டு நினைவலைகள்

தோற்றம் 13 ✱ 04 ✱ 1928

மறைவு 21 ✱ 07 ✱ 2005



**அமரர் கார்த்திகேசு செல்லத்தம்பி**
(முன்னாள் உப்பளக் கூட்டுத்தாபன ஊழியர்)
திதி: 10.08.2006

ஆண்டு ஒன்று மறைந்தாலும் ஆறாது எம் துயரம்
அன்பிற்கோர் இலக்கணமாய் அவனியிலே வாழ்ந்துவிட்டு
ஆண்டவனடி சேர்ந்துவிட்டீர்கள் எம்மையெல்லாம் தவிக்கவிட்டு
என்றுமே அகலாது உங்கள் நினைவுகள் எங்கள் மனதைவிட்டு

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் அன்பு பாசம்
எங்கள் இதயத்தை விட்டு என்றுமே அகலாது ஐயா!
நித்தம் உங்கள் உருவம் நினைவில் வரும்போது
கண்ணீரோடு எங்கள் மனம் உங்கள் நினைவாய் துடிக்கின்றது ஐயா

அன்பான உங்கள் பேச்சும்
அழகிய புன் சிரிப்பும் இன்னும்
எங்கள் மனதில் நிழலாடி நிற்கிறது ஐயா!
உத்தம சீலனாய் ஊர்போற்ற வாழ்ந்தவரே
உங்கள் ஆத்மா சாந்திக்காய் இறைவனை வேண்டுகிறோம்.

(53125)(32-17-15)

நிரந்தர முகவரி:
சங்கத்தார் வயல்,
இயக்கச்சி.

தற்காலிக முகவரி:
உசன்,
மிருசுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவு நாள்





**வை.தயா** (பீற்றர்) — 18-01-1968

மலர்வு

**த.சிவலிங்கேஸ்வரி** (சுமதி) — 18-05-1969

உதிர்வு 24-07-2005

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தில்
நீங்கள் மாண்டு விட்டீர்கள் நாங்கள் மாளுகின்றோம்.

24.08.2005 இல் லெபனான் நாட்டில் இறைபதம் அடைந்த எமது குடும்ப உறவுகளின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நாளை (11.08.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து அவர்களின் ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஊரெழு மேற்கு, சுன்னாகம். (53122)(32-17-15) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதிகள் பாகிஸ்தானில்தான் செயற்படுகின்றனர்

## அமெ.வெளியுறவுத்துணை அமைச்சர் குற்றச்சாட்டு

புதுடில்லி, ஓக.10

இந்தியாவிற்கு எதிராகச் செயற்படும் தீவிரவாதிகள் பாகிஸ்தானில் உள்ளனர் என அமெரிக்க வெளியுறவுத்துணை அமைச்சர் ரிச்சர்ட் பௌச்சர் கூறியுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத் துணை அமைச்சர் ரிச்சர்ட் பௌச்சர் இந்தியா வந்துள்ளார். அவர் நேற்றுமுன்தினம் இந்திய வெளியுறவு அமைச்சரக அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். மூன்றுமணி நேரம் நடந்த பேச்சுக்குப் பின்னர் ரிச்சட் பௌச்சர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தெற்காசிய பிராந்தியத்தில் தீவிரவாதம் இருப்பது குறித்து அனைவருக்கும் தெரியும். அவர்களில் சிலர் பாகிஸ்தானில் உள்ளனர். இவர்களில் சிலர் இந்தியாவுக்கு எதிரான தீவிரவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.இந்த விடயத்தில் காஷ்மீர் பிரச்சினையையும் தீவிரவாதத்தையும் இணைத்துப் பார்க்க விரும்பவில்லை. பல்வேறு காரணங்களுக்காக தீவிரவாதத்தை எதிர்த்து போராட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இரு நாடுகளும் காஷ்மீர் உட்பட அனைத்து பிரச்சினைகளிலும் பேச்சைத் தொடரத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது போன்ற நடிவடிக்கைகளை அமெரிக்கா வரவேற்கிறது.



தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடும் வகையில் அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து பேச்சுக்களை நடத்த வேண்டும். தீவிரவாதம் எந்தப் பகுதியில் இருந்து ஏவப்பட்டாலும் எந்த வடிவத்தில் ஏவப்பட்டாலும்அதைக் கண்டறிவதில் இரு நாடுகளும் இணைந்து செயற்படவேண்டும். -இவ்வாறு ரிச்சர்ட் பௌச்சர் கூறினார். (8)

## ரஷ்யா - சீனா இடையே 1030 கி.மீ. எண்ணெய்க் குழாய் அமைக்கத் திட்டம்

மசகு எண்ணெய் இறக்குமதிக்காக ரஷ்யா வரை ஆயிரத்து 30 கிலோமீற்றர் தூரம் வரை புதிய குழாய் அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது.

இது குறித்து சீன வணிகத்துறை அமைச்சர் யு குவாங்சு கூறியதாவது:-


கடந்த ஆண்டு ரஷ்யாவிடம் இருந்து 127 லட்சத்து 80 ஆயிரம் தொன் மசகு எண்ணெயை சீனா இற[illegible] செய்தது. இது சீனாவின் மொத்த [illegible]ணெய் இறக்குமதியில் 10.1 சதவீதமாகும்.இந்தப் புதிய குழாய் மூலம் ஆண்டுக்கு 15 லட்சம் தொன் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்படும்.

1030 கிலோமீற்றர் தூரமுள்ள இந்தக் குழாய் ரஷ்யாவுக்கு 70 கிலோமீற்றர் தூரம் தான் அமைக்கப்படும். 2020 ஆம் ஆண்டுக்குள் ரஷ்யாவில் சீனா ஆயிரத்து 200 கோடி அமெரிக்க டொலர்கள் அளவுக்கு முதலீடு செய்யத் திட்டமிட்டுள்ளது -என்றார்.. (8)

# அட்லாண்டிஸ் விண்கலம் இம்மாத இறுதியில் விண்ணுக்கு

அட்லாண்டிஸ் விண்கலத்தில் பயணம் செய்ய உள்ள விண்வெளி வீரர்கள் அதற்கான பயிற்சிபெற, கென்னடி விண்வெளி ஆய்வு மையத்துக்கு நேற்றுமுன்தினம் வந்து சேர்ந்தனர்.

அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள்



விண்ணில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை அமைத்து வருகின்றன. இதற்குத் தேவையான பொருள்களையும் விண்வெளி வீரர்களையும் அனுப்பும் பணியில் அமெரிக்க விண்கலங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.கடந்த மாதம் டிஸ்கவரி விண்கலம் விண்ணுக்கு அனுப்பப்பட்டது. இந்த மாத இறுதியில் அட்லாண்டிஸ் விண்கலம் செல்ல உள்ளது. இந்த விண்கலத்தில் ஒரு பெண் உட்பட ஐந்து விண்வெளி வீரர்கள் பயணம் செய்யவுள்ளனர்.இவர்களுக்கு விண்வெளி வீரர் பெரன்ட் ஜெட் தலைமைப் பொறுப்பு ஏற்றுள்ளார். ஐந்து விண்வெளி வீரர்களும் புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி ஆய்வு மையத்துக்கு நேற்றுமுன்தினம் வந்து சேர்ந்தனர்.

அவர்களுக்கு அங்கு பலவிதமான பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன. மேலும் அவர்கள் அணிய வேண்டிய விண்வெளி வீரருக்கு உரிய பிரத்தியேக உடையை அணிந்து அவற்றில் காணப்படும் குறைபாடுகளையும் சரி செய்யும் பணியும் நடக்கவுள்ளது. (8)

# ஈராக்கில் குண்டுவெடிப்பு 39 பேர்பலி 18; பேர் காயம்!

பக்தாத், ஓக.10

ஈராக் தலைநகர் பக்தாத்தில் நடந்த தற்கொலைப் படைத் தாக்குதல் உட்படப் பல்வேறு குண்டுவெடிப்புகளில் 39 பேர் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் 10 பேர் பொலீஸார் ஆவர்.

பக்தாத்தின் வடக்குப் பகுதியில் உள்ள மாகாணத் தலைமை காவல் நிலையத்தின் மீது தற்கொலைப்படைத் தாக்குதல் நடந்தது. வெடிகுண்டு நிரம்பிய ஒரு லொறியை பொலீஸ் தலைமையகத்தின் மீது மோதி அக்கட்டடத்தைத் தகர்த்தனர்.

இதில் 10 பொலீஸார் உயிரிழந்தனர்; 18 பேர் காயமடைந்தனர்.

பக்தாத்தில் ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை ஈராக் மற்றும் அமெரிக்கப் படைகள் கூட்டாகத் தாக்குதல் நடத்தின. இத்தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலை ஈராக் பிரதமர் நௌரி அல் - மாலிகி வன்மையாகக் கண்டித்துள்ளார். இது போன்ற சம்பவம் இனிமேல் நிகழாமல் பார்த்துக்கொள்வேன் என்று கூறிய அவர் நடந்து முடிந்த தாக்குதலுக்கு வருத்தம் தெரிவித்தார். (8)

உலக அரங்கில்

# பசுபிக்தீவு அருகே பலத்த பூகம்பம்

பசுபிக் கடலில் அமைந்துள்ள வனாட்டுத் தீவுக்குஅருகே கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 3.48 இற்கு பூகம்பம் ஏற்பட்டது.ரிச்டர் அளவு கருவியில் அதன் திறன் 6.7 ஆகப் பதிவாகியிருந்தது. அத்தீவின் தலைநகர் போர்ட் விலாவிலிருந்து வடக்கே 220 கிலோமீற்றர் தொலைவில் அந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. பூமிக்கு அடியில்149 கிலோமீற்றர் ஆழத்தில் பூகம்பம் மையம் கொண்டிருந்தது. அந்தப் பூகம்பத்தால்ஆழிப்பேரலை ஆபத்து ஏதும் இல்லை என்று நியூஸிலாந்து நாட்டு அவசரகால நிர்வாகத்துறை தெரிவித்துள்ளது. (8)

# காங்கிரஸ் கட்சியில் இருந்து நட்வர்சிங் இடைநிறுத்தம்

## எண்ணெய் ஊழல் வழக்கின் எதிரொலி



புதுடில்லி,ஓக.10

காங்கிரஸ் கட்சியில் இருந்து நட்வர் சிங் நேற்றுமுன்தினமிரவு இடைநிறுத்தம் செய்யப்பட்டார். கேரள முன்னாள் முதல்வர் அந்தோனி தலைமையில் நடந்த ஒழுங்கு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் இந்த அதிரடி முடிவு எடுக்கப்பட்டது. விளக்கம் கேட்டும் அவருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

ஈராக்கில் உணவுக்கு எண்ணெய் திட்டம் அமுலில் இருந்த போது,நட்வர்சிங் பதவியை துஷ்பிரயோகம் செய்து தனக்கும் தனது மகன் ஜகத் சிங்குக்கும் வேண்டப்பட்டவர்களுக்கு மசகு எண்ணெய் கூப்பன்களைப் பெற்றுக்கொடுத்தார் என்று பதக் விசாரணைக் குழுவின் அறிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இந்தக் குழு அறிக்கை வெளியானது முதலே காங்கிரஸ் மற்றும் நட்வர்சிங் இடையே பெரும் விரிசல் ஏற்பட்டு விட்டது. தன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுதி செய்து கொண்ட நட்வர்சிங் 'என்னிடம் ஏராளமான உண்மைகள் உள்ளன. சமயம் வரும்போது அவற்றை வெளியிடுவேன்' என்று கூறி காங்கிரஸை மிரட்டத் தொடங்கினார். மேலும் இந்த அறிக்கை நாடாளுமன்றில் வெளியாவதற்கு முன்பே ஊடகங்களுக்கு கசிந்த விவகாரத்தில் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு எதிராக மாநிலங்களவையில் உரிமைப் பிரச்சினை கொண்டுவர மனுக் கொடுத்தார்.

இது கட்சி விரோத நடவடிக்கையாகவே காங்கிரஸ் தரப்பில் கருதப்பட்டது.

எனினும் பதக் குழு அறிக்கை நாடாளுமன்றில் வெளியிடப்படும்வரை அமைதி காக்கப்பட்டது.நட்வர் சிங் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனில் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு கூடி முடிவு எடுக்க வேண்டும். நேற்று முன்தினம் மாலையே இந்தக் கூட்டம் நடந்திருக்க வேண்டும். ஆனால், இந்தக் குழுவின் தலைவராக இருக்கும் ஏ.கே.அந்தோனி, திருவனந்தபுரத்தில் இருந்து நேற்றுமுன்தினம் இரவுதான் டில்லி வர முடிந்தது. விமானம் தாமதமானதே இதற்குக் காரணம். இதையடுத்து ஒழுங்கு நடவடிக்கைக் குழுக்கூட்டம் டில்லியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்தது. அப்போது கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்த நட்வர்சிங்கை இடைநிறுத்தம் செய்வது என முடிவு செய்யப்பட்டது.இது தொடர்பான பரிந்துரையும் கட்சியின் தலைமைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேலும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி ஒழுங்கீனமாக செயற்பட்டதால் அவருக்கு விளக்கம் கேட்டும் கடிதம் அனுப்ப முடிவு செய்யப்பட்டது.

கேரள முன்னாள் முதல்வர் அந்தோனி தலைமையில் நடந்த ஒழுங்கு நடவடிக்கைக் குழுக் கூட்டத்தில் இராணுவ அமைச்சர் பிரணாப் முகர்ஜி,மத்திய மின்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷிண்டே, அகில இந்திய காங்கிரஸ் பொருளாளர் மோதிலால் ஓரா ஆகியோர் கலந்துகொண்டனர். (8)

# இலங்கைப் பிரச்சினை விடயத்தில் இந்திய அரசு தலையிட வேண்டும்

## பா.ஜ.க. துணைத்தலைவர் கோரிக்கை

இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு சுமுகத் தீர்வுகாண வேண்டும் என்று இந்திய பாரதீய ஜனதா கட்சியின் துணைத் தலைவர் இல.கணேசன் கேட்டுள்ளார்.

காஞ்சிபுரத்தில் இது குறித்து இல.கணேசன் செய்தியாளர்களுக்குக் கூறியதாவது:-

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீட்டினால் இருதரப்பும் சுமுக் முடிவு எட்ட முடியும் என்ற நம்பிக்கை வைத்துள்ள நிலையில் மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

இந்தப் பிரச்சினையால் ஆரம்பத்திலிருந்தே தமிழகத்திற்கு இலங்கை அகதிகள் அவ்வப்போது வருவதும் பின்பு தாய்நாடு திரும்புவதும் தொடர்கதையாகி விட்டது. இது தடுக்கப்படவேண்டும்.

முன்பு இருதரப்பினருக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் வெறும் ஏட்டளவில்தான் உள்ளது. அவைகள் சரியாக அமுல்படுத்தப்படவில்லை. அங்கு இலங்கை அரசு என்பதற்குப் பதிலாக சிங்கள அரசுதான் நடக்கிறதோ என்ற சந்தேகம் உருவாகியுள்ளது - என்றார்.

# ஹிஸ்புல்லா இயக்கத்துக்கு உதவியளிப்பதாக ஈரான்,சிரியா மீது இஸ்ரேல் குற்றச்சாட்டு

ஈரான்,சிரியா ஆகிய நாடுகள் அளிக்கும் உதவியால் தான் ஹிஸ்புல்லா இயக்கம் திடீரென இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்திருக்கிறது. என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

இஸ்ரேல் அரபுப் பிரதிநிதி அவி பஸ்னேர் இதை ஜெருசலேம் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

'அணு ஆயுத தயாரிப்பு விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்டனத்திற்கு உள்ளாவோம் என்று அஞ்சும் ஈரான்,அதிலிருந்து உலகின் கவனத்தை திசை திருப்ப ஹிஸ்புல்லாவிற்கு ஆயுதம் மற்றும் பணம் தந்து எங்கள் மீது ஏவி விட்டிருக்கிறது.

'சிரியாவும் அதேபோல ஹிஸ்புல்லா இயக்கத்திற்கு தூபம் போட்டு வருகிறது.நாங்கள் ஹிஸ்புல்லாவிற்கு மட்டுமல்ல,அவர்களுக்கு துணை போகிறவர்களுக்கும் தக்க பாடம் புகட்டுவோம்.' என்று அவர் எச்சரித்தார்.

ஆனால்,சிரியாவும் ஈரானும் இதை மறுத்துள்ளன. ஹிஸ்புல்[illegible] தார்மீக ஆதரவு ம[illegible]டுமே அளித்து வருவதாக அவை கூறி வருகின்றன.

# ஹமாஸ் தலைவர்கள் தொடர்ந்து கைது!

ரமல்லா, ஓக.10

பலஸ்தீனப் பகுதிகளில் வசிக்கும் ஹமாஸ் இயக்கத் தலைவர்களை இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து கைதுசெய்து வருகின்றது.

ஹமாஸ் இயக்கம் தங்களுக்குள் சட்டமன்றம் போல் ஓர் அமைப்பை நடத்தி வருகிறது. அதன் சபாநாயகர் அஜீஸ் துவைக் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டார்.

பதேல் ஹம்தான் என்ற சட்டமன்ற உறுப்பினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டார். இதற்காக ரமல்லா நகருக்கு 24 இற்கும் மேற்பட்ட இராணுவ ஜீப்புகளில் இஸ்ரேலியர்கள் வந்தனர். அவர்கள் ஹமாஸ் இயக்கத்தவர் வசிக்கும் இ[illegible] சுற்றிவளைத்தனர்.

ஹமாஸ் என்ற அமைப்பை பலஸ்தீனர்களின் விடுதலைக்கான அமைப்பாக பலஸ்தீனத்தை ஆதரிக்கும் நாடுகள் கருதுகின்றன. ஆனால், இஸ்ரேலும்மேற்கிந்திய நாடுகளும் அதைப் பயங்கரவாத அமைப்பாகவே கருதுகின்றன.

இஸ்ரேலிய இராணுவ வீரர்கள் இருவர் உயிரோடு கடத்தப்பட்டதில் லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புக்கும் ஹமாஸ் இயக்கத்துக்கும் பங்கு இருப்பதால் இரு அமைப்புகளைச் சேர்ந்தவர்களையும் கண்டுபிடித்து நிர்மூலமாக்கும் பணியில் இஸ்ரேல் இறங்கியிருக்கிறது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி முதல் ஹமாஸ் இயக்கப் பிரமுகர்களை இஸ்ரேல் இராணுவம் கைது செய்து வருகின்றது. இதுவரை 8 அமைச்சர்கள், 26 சட்டமன்ற உறுப்பினர்கள் உட்பட 64 அரசியல் தலைவர்களை இஸ்ரேல் இராணுவம்இப்படிக்கைது செய்திருக்கிறது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாயி சிந்தனை

## நல்லதும் தீயதும்

'பாபம்' என்பது தனியானது அல்ல, தான் செய்யும் செயலிலேயே உள்ளது. தெய்வத்துவம் என்பதும் அவரவர் செய்யும் செயலிலே உள்ளது " எனது நன்மைக்கும் தீமைக்கும் என் குணமும் செயலுமே காரணம். ஆகவே என் குணத்தைச் சிறப்பானதாகக் கொள்ளவேண் டும்" என்று உங்களுக்குள்ளே நீங்களே உறுதி பூண்டு செயற்படவேண்டும். அப்போது வாழ்க்கை அர்த்தமுள்ளதாகும். நீங்கள் ஆனந்தமான வாழ்வு பெற வேண்டுமானால் உங்கள் நடத்தையும் குணமும் சிறப்புற வேண்டும். [த.ச.சா. 1998 ஓகஸ்ட்.ப.7]

# மூதூரிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கென 24 முகாம்கள்

மூதூர்,ஓக.10

மூதூர், தோப்பூர் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த சுமார் 45ஆயிரம் பேர் கந்தளயாய், தம்பலகாமம், முள்ளிப்பொத்தானை, கிண்ணியா போன்ற பகுதிகளில் 24 முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்தவர்களில் 2ஆயிரம் பேர் தமிழர்களாவர். இவர்கள் 4 முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

இடம்பெயர்ந்தோர்களுக்கான சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை அவ்வப் பிரதேச செயலகங்கள் வழங்கி வருகின்றன. 18அரச சார்பற்ற நிறுவனங்களும் உதவிகளை வழங்கிவருகின்றன.

இதேவேளை -

இடம்பெயர்ந்த மக்களின் தகவலின்படி மூதூரில் தற்போது 5 ஆயிரம் குடும்பங்கள் வரை வாழ்வதாக அறியப்படுகின்றது. (202)

# மின்சாரசபை திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம்

## உயர்நீதிமன்றம் தீர்மானம்; அரசின் நிலை இக்கட்டு

கொழும்பு, ஓக. 10

இலங்கை மின்சாரசபை திருத்தச் சட்டமூலம் அரசமைப்புக்கு அனுகூலமானதல்ல. எனவே, அதைத் தற்போதைய வடிவத்தில் நிறைவேற்றுவதாயின் நாடாளுமன்றத்தில் விசேட பெரும்பான்மை ஆதரவு (மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு) அவசியம்.

- இவ்வாறு உயர்நீதிமன்றம் தீர்மானித்திருப்பதாக நேற்று முன்தினம் நாடாளு மன்றத்தில் அறிவித்தார் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார.

இலங்கை மின்சாரசபையின் சில பொறுப்புகளைத் தனியார் வசம் அளிக்கும் வகையில் இந்தத் திருத்தச்சட்டமூலம் கொண்டுவரப்படுவதாகத் தெரிவித்து அதற்கு கடும் எதிர்ப்புக் காட்டி வருகின்றது ஜே.வி.பி.

ஜே.வி.பியின் எதிர்ப்புக் காரணமாக இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றமுடியாது பரிதவிக்கும் அரசு, சட்டமூலத்தை நிறைவேற்றாத காரணத்தால் மாதாந்தம் பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாவை மின் உற்பத்தி மற்றும் மின் விநியோகப் பணிகளுக்கான மானியமாக இழந்து வருகின்றது.

இதனால். ஜே.வி.பியின் எதிர்ப்பையும் மீறி இச்சட்டமூலத்தை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டிருக்கும் அரசுக்கு, சட்டமூலம் தொடர்பான உயர்நீதி மன்றத் தீர்ப்பு பேரிடியாக வந்து இறங்கியிருப்பதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

ஜே.வி.பி. போன்ற கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் இச்சட்டமூலத்துக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவைப் பெறவேண்டுமானால் -

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியினதும், ஏனைய உதிரிக்கட்சிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி, மேலக மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போன்றவற்றில் ஒரு சிலவற்றினதும் ஒத்துழைப்பை அரசுத் தரப்பு பெற்றாக வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பியை ஓரம்கட்டுவதற்காக இந்தச்சட்டமூலத்துக்கு ஐ.தே.கட்சி ஆதரவளிக்க முன்வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

# மறைந்தும் மறையாத இசைக்கலைஞன்



'ஈழத்துச் சீர்காழி கோவிந்தராஜன்' என்று அழைக்கப்பட்ட அமரர் **A.R.**ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அவர்கள் மறைந்தும் மறையாமல் மக்கள் மனங்களில் வாழ்கின்றார். அவரின் இனிமையான குரல் என்றும் மறக்கமுடியாதது. மெல்லிசை மன்னன் என இசைக்கலைஞர்களால் புகழப்பட்டவர். யாழ். நகரில் முதன்முதலாக மெல்லிசைக் கோஷ்டியை உருவாக்கியவர். இசை மேதை கண்ணனின் கண்ணன் கோஷ்டிக்கு உயர்வை ஏற்படுத்தியவர் அமரர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள். கண்ணன் கோஷ்டி எங்கு சென்றாலும் மக்கள் கிருஷ்ணமூர்த்தி வந்திருக்கிறாரா என்று கேட்பார்கள். பின்பு சில காலம் கிருஷ்ணா மெல்லிசைக் குழுவை அவர் அமைத்து அதன் மூலம் பெரும்புகழ் அடைந்தார்.

1959ஆம் ஆண்டு வண்ணைக் கலைவாணர் நாடகமன்றம் ஆரம்பிக்கப்பட்டபோது கிருஷ்ணமூர்த்தி அவர்களும் ஆரம்ப அங்கத்தவரானார். நாடக மன்ற இசைப்பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. நடிப்பிலும் அவர் பெரும் பங்காற்றினார். 'வீரமைந்தன்' நாடகத்தில் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அமைச்சராக நடித்து புகழ் பெற்றார். கலையரசு சொர்ணலிங்கம் ஐயாவிடம் நடிப்புக்குப் பாராட்டுப் பத்திரமும் பெற்றார். பக்திப் பாடலென்றால் கிருஷ்ணமூர்த்தி பாடவேண்டும் என்று மக்கள் சொல்லுமளவிற்குப் பக்திப் பாடலில் உயர்ந்துநின்றார். 'பக்திப் பாடல் அரசு' என்று மக்களால் பாராட்டப் பெற்றார். 'முத்தைத்திரு பத்தித் திருநிறை' என்ற திருப்புகழ் பாடலை அமரர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பாடும்போது ரசிகர்கள் தம்மை மறந்து ரசிப்பார்கள். அப்படியான நல்ல கலைஞனை நடுவயதில் இழந்துவிட்டோம். அவர் மறைந்து இன்றுடன் 12 ஆண்டுகள் ஆகினாலும் அமரர் கிருஷ்ணமூர்த்தியின் மெல்லிசை மக்கள் மனங்களில் ஒலித்துக்கொண்டேயிருக்கும்.

**இரா.பற்குணம்.**
**வண்ணை கலைவாணர் நாடகமன்றம்,**

# பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் மூதூர் படுகொலைக்கு கண்டனம்

மூதூரில் பட்டினிக்கு எதிரான நிறுவனத் தின் பணியாளர்கள் 15 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பிலிப்பே டொஸ்ரே பிளாஸி கண்டித்திருக்கிறார்.

'மிகக் கொடுமையானதும் கோழைத்தனமானதுமான செயல்' என்று இந்தப் படுகொலைகளை வர்ணித்திருக்கிறார் அவர்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தொண்டு நிறுவனமான பட்டினிக்கு எதிரான நிறுவனத் தின் (ஏசிஎப்) பணியாளர்களான 15 தமிழர் கள் மூதூர் நகரில் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சு நேற்று வெளி யிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நாளாந்தம் சிவிலியன்களைப் பாதிக்கும் வன்செயல்களை இரண்டு தரப்புகளும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்திருக்கும் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர், உயிரிழந்த நிவாரணப் பணியாளர் களின் குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்திருக்கிறார். (ஐ)

# பளை பாடசாலையில் கட்டடங்கள் திறப்பு

தென்மராட்சி, ஓக.10

பளை சேரன்பற்று கணேசா வித்தியாலயத்தில் நிக்கொட் நிறுவன காப் திட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக்கட்டம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிறுவனத்தினால் புனரமைக்கப்பட்ட வகுப்பறைத் தொகுதி ஆகியவற்றின் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. வித்தியாலய அதிபர் க.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொள்வார். (117)

# வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து இன்று தொடக்கம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை குறிப்பிட்ட இடங்களில் ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி ஏற்றப்படும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு இலக்கத் தகடுகள் வழங்கப்படவுள்ளதால் கடந்த வருடம் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டபோது சபையினால் வழங்கப்பட்ட அட்டையினை தடுப்பூசி ஏற்றும் நிலையங்களுக்கு கொண்டு வருமாறு நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் அறிவித்துள்ளார். (117)

# யூனியன் டிரஸ்ட் வைப்பு மீளளிப்பு

யூனியன் டிரஸ்ட் அன்ட் இன்வெஸ்ட்மன் லிமிட்டெட் நிறுவனம் கொழும்பு மாவட்ட நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் கலைக்கப்பட இருக்கின்றது.

நீதிமன்ற உத்தரவுப்படி நிறுவனக் கலைப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டோர், இந்நிறுவனத்தில் வைப்பிலிட்டவர்களின் வைப்புத் தொகையில் எஞ்சிய 33 வீதத்தை அவர்களுக்கு மீளளிக்க ஏற்பாடு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜூலை 21 ஆம் திகதி முதல் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மீளளிப்பைப் பெறவேண்டியோர், 'யூனியன் டிரஸ்ட் அன்ட் இன்வெஸ்ட் மன் லிமிட்டெட்' மே/பா எஸ்.ஜே.எம்.எஸ். அஸோஸியேட்ஸ், இரண்டாவது மாடி, இல. 30, காலிவீதி, கொழும்பு - 06 என்ற முகவரியுடன் (தொலைபேசி இலக்கம் 2508874) தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கின்றார்கள்.


**சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்னும் முகவரியில் அமைந்துள்ள விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்தில் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

1. எழுதுவினைஞர்
க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்களும் சித்தி பெற்றிருக்க வேண்டும். ஓரளவுக்கேனும் ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்திருப்பின், மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

2. உதவியாளர்
குறைந்த பட்சம் க.பொ.த சாதாரண தரத்தில் நான்கு பாடங்களிலேனும் சித்தி பெற்றிருக்க வேண்டும். வாழ்வக இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்றக்கூடியவராக இருக்க வேண்டும் (இப்பதவிக்குப் பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்)

3. விடுதி பராமரிப்பாளர்
விழிப்புல வலுவிழந்த பிள்ளைகளை பராமரிப்பு செய்யக் கூடிய தகுதியுடையவராக இருத்தல் வேண்டும். முன்பு விடுதி மேற்பார்வையாளராகப் பணியாற்றிய அனுபவம் இருப்பின் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும் (இப் பகுதிக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்

இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்வோர் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, கல்வித்தகைமை, பிற தகைமைகள் போன்ற விடயங்களைத் உள்ளடக்கிய தமது விண்ணப்பத்தினை எதிர்வரும் 20.08.2006 இற்குப் பிந்தாமல் தலைவர், வாழ்வகம் , சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம் என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அன்றி நேரிலோ அனுப்பி வைக்கவும். (சி-50735)(21.17.16)



**60 ஆவது பிறந்ததின வாழ்த்துக்கள்**



திருமதி
**சுப்பிரமணியம் புவனேஸ்வரி** *(ஆனந்தி)*
இவர் தனது பிறந்த நன்னாளை இன்று (10.08.2006) வியாழக்கிழமை கொண்டாடு கின்றார் இவரை இவரது அருமை மகள் ஷைலா நீடூழி காலம் வாழ்கவென திருநெல்வேலி பத்திரகாளி அம்பாளின் இறை ஆசியுடன் வாழ்த்துகின்றார்.

நாவலடிலேன், திருநெல்வேலி.
077 6622101. (53206)(21.17.16)
**பேர்ளின் ஷைலா** *(மகள்)*.



உ
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

**60ஆவது பிறந்த தினவாழ்த்து**



**சுப்பிரமணியம் புவனேஸ்வரி**
*(ஆனந்தி)*
இன்று (10.08.2006) இல் தனது 60 ஆவது பிறந்த தினத்தை திருநெல்வேலியில் கையலன் கிரி இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

குக கமலவாசா,
உடுவில்.
(53210)(21.17.16)
உடுவில் சிறிய தாயார்
தம்பி குகன்.


# மரண அறிவித்தல்

## ஐயாத்துரை சுபத்திராதேவி



யாழ்.நாச்சிமார் கோயில் பூநாறி மரத் தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஐயாத்துரை சுபத்திரா தேவி அவர்கள் நேற்று (09.08.2006) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை-துரையம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, செல்லப்பா, சிறீஸ்கந்தராஜா மற்றும் இராஜேஸ்வரி (கொழும்பு), இராசமணி (லண்டன்), கயிலாய நாதன் (பிறிஸ்ரோ கடைச்சல் தொழிலகம்), சுசீலகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற வர்களான தியாகராஜா, மனோகரன் மற்றும் விக்கினேஸ்வரி, தனலட்சுமி, கீதாஞ்சலி, சுகந்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

688, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(பூநாரி மரத்தடி)
(53208)(21.17.16)

தகவல்:
சகோதரன்
ஐ.கயிலாயநாதன்
(பிறிஸ்ரோ கடைச்சல் தொழிலக உரிமையாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரச்சினைக்கு போர் வழிமுறை தீர்வாகாது!

## இந்திய வெளியுறவு இணை அமைச்சர்

புதுடில்லி, ஓக.10

''இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வுகாண முடியும். இராணுவ நடவடிக்கையால் தீர்வு கிடைக்காது.'' - என்று இந்திய வெளியுறவு இணை அமைச்சர் அகமது தெரிவித்துள்ளார்.

இந்தியா, மியன்மார், இலங்கை, தாய்லாந்து ஆகிய நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக் குறித்து அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு நேற்று முதல் டில்லியில் நடைபெற்று வருகிறது. இதில் கலந்து கொள்ள இந்தியா வந்தடைந்துள்ள இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர, இந்திய வெளியுறவு இணை அமைச்சர் அகமதுவை நேற்று முன்தினம் இரவு சந்தித்தார்.

இலங்கையின் இறையாண்மை மற்றும் ஒற்றுமையைக் காக்க இலங்கை அரசுக்கு இந்தியா துணைபுரியும். இலங்கைப் பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கை தீர்வாகாது -

அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்க்க இலங்கை அரசும், புலிகளும் பேச்சுக்களைத் தொடருவது மிக அவசியமான தேவை - என்று அகமது வலியுறுத்தினார். இலங்கையில் அனைத்துத் தரப்பினரும் ஏற்கக் கூடிய அதிகாரப் பகிர்வுத் திட்டத்துக்கு இந்தியாவின் ஆதரவையும் அமைச்சர் அகமது தெரிவித்தார். (க)

## வலைப்பந்தாட்டத்தில்

# யூனியன் கல்லூரி அணிகள் தேசிய மட்டத்திற்குத் தகுதி!

யாழ்ப்பாணம், ஓக10

திருகோணமலையில் கடந்த திங்கட்கிழமை நடந்த 17,19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் இரு பிரிவுகளிலும் வெற்றி பெற்ற யூனியன் கல்லூரி தேசிய மட்டப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

திருமலை மக்கெய்சர் விளையாட்டரங்கில் நடந்த 17 வயதுப் பிரிவில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி திருகோணமலை நாளந்தா ம.வியை 48:0 என்ற ரீதியில் வெற்றி கொண்டது.

19வயதுப் பிரிவில் திருகோணமலை ராஜகிரிய ம.வியை 57:6 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் யூனியன் வெற்றி கொண்டது.

இரு போட்டிகளிலும் வெற்றிபெற்றதன் மூலம் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது. (ம-1)

# கதிர்காமம் பாதயாத்திரை புறப்பட்ட தமிழ் இளைஞர்கள் நால்வர் கைது!

## அம்பாறையில் இடைமறித்து கூட்டிச் சென்றது இராணுவம்

அம்பாறை,ஓக.10

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியிலிருந்து கதிர்காமம் முருகன் ஆலயத்துக்குப் பாதயாத்திரை சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் நால்வர் அம்பாறை உகந்தை வள்ளியம்மன் ஆறு இராணுவ முகாம் பகுதியில் வைத்துப் படையினரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

ரி. விமல், கே. கமலராஜன், ரி. ரவிக்குமார், எம். ராஜன் ஆகிய நான்கு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா தற்போது நடைபெறுகிறது. அதனை முன்னிட்டு மேற்படி ஆலயத்துக்குப் பாத யாத்திரை சென்ற இவர்களை படையினர் இடைவழியில் - அம்பாறையில் - மறித்துக் கைது செய்து கூட்டிச் சென்றுள்ளனர்.

இந்தக் கைது தொடர்பாக கதிர்காமம் முருகன் ஆலய திருவிழாவுக்கான ஜனாதிபதி செயலக இணைப்பாளரும், நடவடிக்கைக் குழுவின் செயலாளருமான பத்மசிறி ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாகக் கேள்வியுற்ற குறித்த இளைஞர்களின் பெற்றோர், உறவினர்கள் ஆலயத்துக்குப் பாத யாத்திரை சென்ற வேளையில் இப்படி நேர்ந்தமை தொடர்பாகப் பெரிதும் கவலையடைந்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க)

# காலியில் ரயில் மோதி ஓட்டோ சிதறியது; மூவர் பலி!

காலி, கொக்கெலப் பிரதேசத்தில் நேற்றுக் காலை 6.30 மணியளவில் பாதுகாப்பற்ற ரயில் கடவை ஒன்றில் இட்ம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்திருக்கின்றனர்.

மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கி வந்து கொண்டிருந்த அதிவேக ரயில் கடவைப் பகுதியில் ஓட்டோ ஒன்றை மோதிப் பந்தாடியது. அந்த ஓட்டோவில் பயணம் செய்த இரு பெண்கள் உட்பட மூவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். அவர்களது சடலங்கள் காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா குணரத்தினம்

(சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும், பணிப்பாளர் - பொது முகாமையாளர், சிலிங்கோ கொன்சல்டன்சி அன்ட் அலீட் சேவிசஸ்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குணரத்தினம் அவர்கள் 08.08.2006 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் தயாவதனியின் அன்புக் கணவரும், லஷ்மன் (கனடா), தாக்ஷாயினி (ஆஸ்திரேலியா), மற்றும் பிரித்தானி உயர் ஸ்தானிகராலயத்தைச் சேர்ந்த சஜீவன் ஆகியோரின் பாசமுள்ள தந்தையும், பார்த்தீபனின் மாமனும், காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையா - இராசம்மா தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற வைத்திய கலாநிதி கோபாலசிங்கம் - சிவபாக்கியவதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற மேஜர் இரத்தினம், காலஞ்சென்ற இராஜரத்தினம், மற்றும் நவரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.08.2006) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிமுதல் பொரளை ஏ.எப். றேமன்ட் அஞ்சலி மண்டபத்தில் வைக்கப்பட்டு பொரளை கனத்தை மயானத்தில் இடம் பெறவுள்ள தகனக்கிரியைக்காக 13.08.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**T - 5/5 அன்ரர்சன் தொடர்மாடி, கொழும்பு - 5.** (சி-50741)

தகவல்: **சஜீவன் (மகன்)**

## ஆ.கந்தப்பு

கரவெட்டி கிழக்கு, வளர்மதியைப் பிறப்பிடமாகக் கொண்ட அரச ஒப்பந்தகாரர் ஆ.கந்தப்பு நேற்று (09.08.2006) புதன்கிழமை சுதந்திரபுரம் மத்தியில் உள்ள வாழ்விடத்தில் காலமானார்.

அன்னார் தெய்வானையின் அன்புத் கணவரும், இந்திரப்பிரபா, டென்மார்க்கில் வசிக்கும் குணசேகரம், ஞானசேகரம், மகேஸ்வரன், சந்திரசேகரம், குலசேகரம் ஆகியோரின் அன்புத்தந்தையும், முருகுபாரிமகன், யோகசக்தி, மனோன்மணி, விமலா, பாலாம்பிகை, சுமங்கலா ஆகியோரின் மாமனும், பிரதீபன் (விரிவுரையாளர்- **I.C.S** கணனி நிலையம், புதுக்குடியிருப்பு), பிரதீஸ், சிந்துஜா, கர்த்திஸ், ஜோர்த்தீஸ், தரண்ஜா, ஜனுஷன், சபீனா, ஜானு ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2006) பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **இ.பிரதீபன்.**

## வ.குமரேசமாணிக்கம்

(ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர் - நாவலப்பிட்டி)

இடைக்காட்டைச் சேர்ந்த வ.குமரேசமாணிக்கம் நேற்று (09.08.2006) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், தேன்மொழி, பாலகுமார், தவச்செல்வி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வமனோகரன் (இத்தாலி), மங்களகௌரி (ஆசிரியை - திருகோணமலை), சுதாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (10.08.2006) வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு இடைக்காடு இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இடைக்காடு, அச்சுவேலி.**

தகவல்: **கு.பாலகுமார் (மகன்)**


**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
டிஷ்யூம் புகழ்ஜீவா, கோபிகா, மோகன்லால், பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த

**அரண்**

காட்சி நேரம்
10.30, 2.30, 6.30 [illegible]

**நாதன்ஸ் சினிமா** யாழ்ப்பாணம்.

குடும்பத்துடன் பார்த்து மகிழ வேண்டிய படம்
**சூப்பர்மான் ரிட்டேன்ஸ்** (superman returns)

12.08.2006 சனிக்கிழமை கட்டட நிதியுதவிக்காட்சி
சிவாஜி, பத்மினி நடித்த
**தில்லானா மோகனாம்பாள்**

**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
ஜெயம்ரவி, திரிஷா, தேஜாஸ்ரீ, ரிச்சாட்பட்டேல்
**சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்**
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்
ரிக்கட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
(சி-471390)

**பகுதிநேர ஆசிரியர் பதவி**

O/L வகுப்பிற்கும் அதற்கு கீழ்பட்ட வகுப்புகளிற்கும்.

**தமிழ், சைவ சமயம், ஆங்கிலம் சமூகக்கல்வியும் வரலாறும்**

ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு தகைமையும் அனுபவங்களும் உடைய ஆசிரியர்கள் அவற்றை நிரூபிக்கும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 15.08.2006 க்கு முன் விண்ணப்பிக்கவும்.

*The Express Institute* Irupalai, Kopay. (சி-50743) அதிபர்.

**40%**

மார்க்கோணியின் நினைவு தினத்தை முன்னிட்டு தபாற் கற்கைகளுக்கு 40வீத கழிவு வழங்கப்படுகிறது. இது Aug 25th வரை!! (ஒரு வருடத்தில் ஒரு முறை)

| | |
|---|---|
| Dip in TV, Radio,VCD Repair | - 1500/= |
| Dip in Cellphone Repairs | - 1200/= |
| Dip in Electrical Wiring | - 1200/= |
| Dip in Computer Hardware | - 1000/= |
| Dip Computer Device Repair | - 1200/= |
| Cer in Electronics ( For all) | - 750/= |



[illegible] Office, பெறுபவரின் பெயர் - Manager, Marconi Technical Institute.
[illegible] ரூ 5 ஒட்டப்பட்ட நீள கடித உறையை வைத்து அனுப்புங்கள்

Marconi Technical Institute, 410 - 2/1, Galle Road, Col- 06. 2361362


# மரண அறிவித்தல்கள்

## பேராசிரியர் விசாகசுந்தரம் குணானந்தம்

(நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணரும், வைத்திய கலாநிதியும்)



வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும், முன்னாள் கிழக்கிலங்கை பல்கலைக்கழக பதில் மருத்துவ பீடாதிபதியும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியருமாகிய வைத்தியகலாநிதி விசாகசுந்தரம் குணானந்தம் லண்டனில் 06.08.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான விசாகசுந்தரம் - திரிபுரசுந்தரி தம்பதியரின் அருமை மகனும், கார்த்திகேசு -யோகாம்பிகை ஞானசௌந்தலா தம்பதியரின் அன்பு மருமகனும், செல்வராணியின் (லண்டன்) பாசமிகு கணவரும், **Dr.** துஷிதா (லண்டன்), **Dr.** சுரேன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கெரிலீயின் (லண்டன்) மாமனும், பேராசிரியர் நித்தியானந்தம் (யாழ். பல்கலைக்கழகம்), சுகந்திராதேவி, செல்வானந்தம் (கம்போடியா), சறோஜினிதேவி, அருளானந்தம் (**Manager - N.S.B - Jaffna**), வசந்தாதேவி ஆகியோரின் அருமைச் சகோதரனும், **Dr.**ஆனந்தவேல் (இந்தியா), **Dr.**இராஜேந்திரன் (இந்தியா), இந்திராணி (கனடா), பாலேந்திரன் (இந்தியா), குலேந்திரன் (கனடா), உமாராணி (லண்டன்), ரூபாராணி (லண்டன்), புவனராணி (கனடா), ஹரேந்திரன் (**U.S.A**) ஞானேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் **Southantton u.k.** இல் எதிர்வரும் 12.08.2006 சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**22, Tomkyne clcse,
Phandlers fard,
Eastleigh Hampshire,
So - 53 - 4 HL, U.K.
T.P: 0044 2380253105, 222 5944**

தகவல்: **குடும்பத்தினர்.**

(53215)

## இரத்தினவேல் அகிலன்

(பரியோவான் கல்லூரி பழைய மாணவன்)



இல. 22, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறையை வசிப்பிடமாகக் கொண்ட இரத்தினவேல் அகிலன் 08.08.2006 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் ராஜரூபினி (ஆசிரியை- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், அரியாலை இரத்தினவேல்- கலாதேவி தம்பதியரின் பாசமிகு மகனும், கொழும்புத்துறை தியாகராசா- இந்திராணி தம்பதியரின் அருமை மருமகனும், பிரசாந்தன் (லண்டன்), பிரசன்னா (ஆசிரியர்-வவுனியா கல்மடு மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கல்யாணியின் (லண்டன்) மைத்துனரும், மகாதேவா (இலங்கை மத்திய வங்கி), சண்முகநாதன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு மருமகனும், ராஜரத்சினி (ஜேர்மனி), ராஜவதனி (சுவிஸ்), ராஜமனோகரி (சுவிஸ்), ராஜமாலினி (லண்டன்), ராஜேஸ்வரன் (கனடா), ராஜவினோதினி (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2006) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 22, இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை.** (53212)

தகவல்: **த.இரத்தினவேல் (தந்தை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பேச்சுகளில் இந்தியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இதுதான் எங்களின் (இந்தியாவின்) நிலைப்பாடு'' என்று நாராயணன் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் என்று செய்தி ஏஜென்ஸிகள் குறிப்பிட்டன.

தமிழக முதல்வர் கருணாநிதிக்கும் ஆலோசகர் நாராயணனுக்கும் இடையிலான பேச்சு சுமார் ஒருமணிநேரம் நீடித்தது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய நாராயணன் இலங்கை நிலைமை தொடர்பாக இந்தியாவின் நிலைப்பாட்டை கருணாநிதியிடம் விளக்கினார் என்று குறிப்பிட்டார்.

இந்தியா சென்றிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடமும் இந்தியாவின் இந்த நிலைப்பாடு விளக்கிக் கூறப்பட்டது என்றும் நாராயணன் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தை மங்கள சமரவீரவிடம் தாங்கள் வலியுறுத்தியதாகவும் நாராயணன் குறிப்பிட்டார்.

அதிகாரப் பகிர்வில் என்ன செய்யப்பட வேண்டும் என்றும் விளக்கி இருக்கிறோம். விடுதலைப் புலிகள் விவகாரத்தையும் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையையும் வேறுபடுத்திப் பார்க்குமாறும் தெரிவித்தோம். இதுபற்றி கருணாநிதியிடம் விளக்கும்படி பிரதமர் மன்மோகன்சிங்க என்னை அனுப்பினார். அந்தப் பணியையே நான் இன்று செய்தேன் - என்றும் கூறினார் நாராயணன்.

கேள்வி: அப்படியானால் இந்தியா இலங்கை விவகாரத்தில் தலையிடுகிறதா?

நாராயணன்: இல்லை. இல்லை. இந்தியா இதில் நேரடியாகத் தலையிடவில்லை. இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி செய்யக்கூடிய அழுத்தம் அனைத்தையும் கொடுத்துவருகிறது. இலங்கை அரசின் சிந்தனைப் போக்கில் இந்தியா ஒரு முக்கிய காரணியாக விளங்கிவருகிறது. இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் ஒப்புதல் அவசியம் என்பதையும் இலங்கை அரசாங்கம் மிக நுட்பமாக விளங்கி வைத்துள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு முயற்சியைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு இலங்கை அரசு ஒப்புக் கொண்டுள்ளது. ஆனால், விடுதலைப் புலிகளைக் கையாள்வதில் அவர்களுக்குச் சிக்கல் கள் இருக்கிறது. அந்த விடயத்தைப் பொறுத்தவரை எங்களது கடந்தகால அனுபவத்துக் குப் பிறகு அந்த சூழலை எதிர்கொள்ளும் விடயத்தில் எங்களை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை.

கேள்வி: இலங்கைப் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடும் உத்தேசம் ஏதும் இருக்கிறதா?

நாராயணன்: இப்போதைக்கு இல்லை. இந்தியா நேரடியாக இதில் தலையிட்டுக் கொள்ளாது என்பதுதான் இந்த நிமிடம் வரை எங்களது நிலைப்பாடாக இருந்துவருகிறது. ஆனால், இந்தியா என்பது ஒரு பெரியதேசம். இந்தியாவின் செல்வாக்கும் அதன் அழுத்தமும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதுதான் எல்லோருமே எங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். இதுபற்றி நோர்வேக்காரர்கள் எங்களோடு பேசுகிறார்கள். கண்காணிப்புக் குழுவினரும் பேசுகிறார்கள். மற்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் எங்களிடம் பேசுகிறார்கள்.

கேள்வி: இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கையில் மாற்றம் தேவை என்று கருணாநிதி எதுவும் தெரிவித்தாரா?

நாராயணன்: இல்லை. இந்த விடயத்தில் மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் முழுமையான கருத்தொற்றுமை நிலவுகிறது.

கேள்வி: விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டிருப்பது ஒரு விவாதத்துக்குரிய விடயம் என்று முதலமைச்சர் கருணாநிதி கூறியிருக்கும் பின்னணியில், புலிகள் மீதான தடையை பரிசீலனை செய்யும் எண்ணம் எதுவும் மத்திய அரசுக்கு இருக்கிறதா?

நாராயணன்: இல்லை. விடுதலைப் புலிகள் மீதான தடையைப் பற்றி மத்திய அரசுக்கு எந்த சந்தேகமும் இல்லை. புலிகள் அமைப்பை நாங்கள் ஒரு ஆபத்தான அமைப்பாகவே பார்க்கிறோம். அதன் மீதான தடை என்பது அவசியமானது; நியாயமானது.

கேள்வி: அப்படியாயின் விடுதலைப் புலிகளால் தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று நீங்கள் நினைக் கிறீர்களா?

நாராயணன்: புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் தமிழ்நாட்டில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை. அவர்கள் தற்போதைய நிலையில் இந்தியாவின் ஆதரவை முடிந்தளவு பெறவே விரும்புவார்கள். அந்த நிலையில் அவர்களால் பாதுகாப்பு அச்சம் இருப்பதாக நான் நினைக்கவில்லை. (ஐ - 12)

# அம்புலன்ஸ் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நெடுங்கேணி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகளை மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சேர்த்து விட்டு மீண்டும் நெடுங்கேணி நோக்கித் திரும்பிக்கொண்டிருந்த 'அம்புலன்ஸ்' வாகனமே வழியில் தாக்குதலுக்கு இலக்கானது. விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான பண்டாரக்குளத்திற்கும், சமளங்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதியிலேயே கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

நெடுங்கேணி மருத்துவமனையின் மருத்துவர் கதிர்காமத்தம்பி ஜெயபாலன் (வயது-67) என்ற மருத்துவர், அவரது மனைவியான ஜெயபாலன் பொன்னம்மா (வயது -52) ஆகிய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இவர்களுடன் பயணம் செய்த அம்புலன்ஸ் ஓட்டுநரான புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாசுபதி கோபாலசுந்தரம், தாதியான ஆறாம் கட்டை நெடுங்கேணியைச் சேர்ந்த இராஜலிங்கம் ஜெகனேஸ்வரி (வயது-22), நோயாளர் விடுதிப் பராமரிப்பாளரான ஜெயானந்தன் நகுலேஸ்வரி (வயது-37) ஆகியோரும் இச் சம்பவத்தில் உயிரிழந்தனர்.

இந்தக் கொடூரத் தாக்குதல் சம்பவத்தில் மருத்துவரும், வைத்தியசாலைப் பணியாளர்களும் உயிரிழந்தமை வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மருத்துவ சேவை வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(ம-202-355)

# பேச்சுக்கான புதிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கும் சர்வ கட்சி ஆலோசனைக்குழு கடந்த செவ்வாயன்று கூடி ஆராய்ந்தது. அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேற்படி தீர்மானம் தொடர்பாக குழுவில் இடம்பெறும்அனைத்துக் கட்சிகளும் இணக்கம் தெரிவித் துள்ளன என்றும்-

எதிர்காலத்தில் கூடும் சர்வகட்சி மாநாட்டில் இந்தத் தீர்மானம் முன்வைக்கப்பட்டு பின்னர் அது விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது எனவும் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் தொடர்பாக எதிர்காலத்தில் கூட்டங்களில் விரிவாக ஆலோசிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ - 12)

# மூதூர் கிழக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே இடம் பெயர்ந்த மக்கள் அவ்வப்போது மீண்டும் உள்ளூரில் வெவ்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து அவலப்பட்டனர்.

பின்னர் மாவிலாறு அணை விவகாரம் சூடுபிடிக்கத் தொடங்கியதும் மேலும் பல குடும்பங்கள் அங்கும் இங்குமாக இடம்பெயர நேர்ந்தது.

வான்வழிக் குண்டு வீச்சுகள், ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் அதன்பிறகு தீவிரமடைந் தன.

தற்காலிக தங்கும் இடங்களில் தற்சமயம் தங்கியிருக்கும் பலநூற்றுக்கணக்கான தமிழ்க் குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் மூன்றுவேளை சமைத்த உணவுகளை வழங்கி வருகிறது. இந்த உணவு விநியோகமும் அங்கு கிடைக்கக் கூடிய உணவுப் பொருள்களைக் கொண்டே வழங்கப்பட்டு வருகிறது.

விடாது நடத்தப்பட்டுவரும் ஆட்லறி ஷெல் வீச்சுகளில் இருந்து தப்புவதற்காக அகதிகள் வீதிப் பகுதிகளைத் தவிர்த்து காட்டுப்புறங்களில் பாதுகாப்புத்தேடி ஒதுங்குகின்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்ளூர இடம்பெயர்ந்துள்ள சுமார் 30 ஆயிரம் குடும்பங்களில் கணிசமான குடும்பங்கள் காட்டுப் புறங்களில் பற்றை மறைவுகளில் இரவு பகலாகத் தங்கியிருக்கின்றன என்றும் கூறப்படுகிறது.

இடம்பெயர்ந்து அலையும் பலநூற்றுக் கணக்கான குடும்பங்கள் ஏற்கனவே இந்தப் பகுதிகளில் அரசு விதித்திருந்த பொருளாதாரத் தடை மேலும் இறுக்கப்பட்டிருப்பதால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று அங்கு செயற்படும் தொண்டு நிறுவனங்கள் கூறுகின்றன.

திருகோணமலையில் அரச மற்றும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இடையே சோதனைச் சாவடிகளை நிறுவியுள்ள இராணுவத்தினர் கடந்த ஏப்ரல் மாதம் முதல் புலிகளின் பிரதேசங்களுக்கு அத்தியாவசியப்பொருள்களையும் எரிபொருள்களையும் எடுத்துச் செல்வதற்கு தடையை அமுல் செய்து வருகின்றனர்.

திருகோணமலையில் உள்ள அரச அதிகாரிகளின் உத்தரவுப்படியே இந்தத் தடைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்று இராணுவத் தரப்பில் கூறப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள கிராமங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் கூட்டுறவுக் கடைகளிலும் பொருள் கையிருப்பு அற்றுப் போயிருப்பதாக தொண்டுநிறுவனங்கள் கூறுகின்றன. பால்மா மற்றும் பால் உணவு வகைகள் கிடைக்காததால் அங்குள்ள குழந்தைகள் மற்றும் சிறுவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

(ஐ)

# மாவிலாறில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

''ஆட்லறி மற்றும் விமானத் தாக்குதல்கள் சகிதம் அணைக்கட்டை நெருங்கிய இலங்கை அரசுப் படைகள் ஆற்றின் அணைக் கதவுகளைத் திறந்து விட்டு அங்கேயே நிலை கொண்டிருக்கின்றனர். அணைக்கட்டுப் பிரதேசத்தை இராணுவத்தினர் தமது பூரண கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்கின்றனர்'' என்றார் அந்த அதிகாரி. இது தொடர்பாக புலிகளின் வட்டாரங்கள் கருத்து வெளியிட்ட போது, ''நோர்வேயின் வேண்டுகோளுக்கு அமைவாகவிடுதலைப் புலிகள் மாவிலாறு அணையைத் திறந்து விட்டுள்ளனர். எனினும், அணைக்கட்டுப் பகுதி தொடர்ந்தும் புலிகளின் கட்டுப் பாட்டில்தான் உள்ளது.

அந்தப் பகுதி மீதும் அதனை அண்டிய குடியிருப்புகள் மீதும் இராணுவத்தினர் ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.'' - என்று தெரிவித்தன. (க)

# இடம்பெயர்ந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து இடம்பெயர்ந்து வாகரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொது மக்கள்மீதே இலங்கை விமானப்படையின் 'கிபிர்' ஜெற் விமானங்கள் குண்டுகளை வீசித் தாக்கின என்று கூறப்படுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர் கிழக்குப் பகுதியில் இருந்து ஏற்கனவே சுமார் 7 ஆயிரம் குடும்பங்கள் மட்டக்களப்பு வாகரைப் பகுதிக்கு இடம் பெயர்ந்துள்ளன. (ஐ - 12)

# கிளிங்ரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஏற்படுத்தியுள்ளது. ஆழிப்பேரலையின் பின்னர், சுனாமியிலிருந்து மீளும் ஐ.நாவின் திட்டத்திற்கான விசேட தூதுவராகப் பணியாற்றி வருகிறார் கிளிங்ரன். கொல்லப்பட்ட பணியார்களும் மூதூரில் சுனாமிக்கு பின்னரான புனரமைப்புப் பணிகளையே மேற்கொண்டுவந்தனர்.

சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கொலைகளுக்குக் காரணமாக இருந்தவர்களை அதிகாரிகள் கண்டறிந்து அவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்'' என்றும் ஐ.நா. தலைமையகத்தில் இருந்து வெளியிடப்பட்ட கிளிங்ரனின் அறிக்கை கூறுகிறது. (ம)

# நைனாமடுவிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியிருக்கின்றனர். வவுனியா வடக்கு, நெடுங்கேணி - நைனா மடுப் பகுதியில் இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

சர்வதேச தொண்டு அமைப்புகள், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன் னிலையில் இச்சம்பவம் நடந்துள்ளது.

நெடுங்கேணியில் உள்ள பண்டாரக்குளத்திற்கும், சமளங்குளத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் செவ்வாய்க்கிழமை இரவு 11.30 மணியளவில் நடந்த கிளைமோர் தாக்குதல் சம்பவ இடத்தை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள், வவுனியா மாவட்ட மருத்துவ அதிகாரி ஆகியோர் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் தலைமையில் சென்று பார்வையிட்டனர். சம்பவ இடத்தைப் பார்வையிட்ட அவர்கள், அச்சம்பவத்துக்குத் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்தனர். பின்னர், தமது பகுதிக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது அவர்களுக்கு எதிரே 500 மீற்றர் தொலைவில் அவர்களை நோக்கிய திசையில் வந்து கொண்டிருந்த மற்றுமொரு மருத்துவரின் வாகனம் கிளைமோர் தாக்குதலில் சிக்கியது.

அந்த வாகனத்தில் வந்து கொண்டிருந்தவர் தமிழீழத் தாயகத்தின் பின் தங்கிய பகுதி களில் வாழ்கின்ற மக்களின் மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவின் நடமாடும் சேவையின் பெண் மருத்துவர் ஆவார்.

இத்தாக்குதலில் அவரின் வாகனம் சேதமடைந்துள்ளது. மருத்துவர் காயங்களின்றித் தப்பியுள்ளார்.

இச்சம்பவத்தை நேரடியாகக் கண்ட கண்காணிப்புக் குழுவினரும், செஞ்சிலுவைச் சங்கத்தினரும் கடும் அதிர்ச்சிஅடைந்ததுடன் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## பற்றிக் வின்சலோஸ் இமல்டா



அசெம்பிளி ஒவ் கோட், யாழ்ப்பாணம், தேவசபை விசுவாசியும், சென். ஜேம்ஸ் மேற்கு குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பற்றிக் வின்சலோஸ் இமல்டா நேற்றுமுன்தினம் (08.08.2006) செவ்வாய்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் பற்றிக் வின்சலோஸ் அவர்களின் அன்பு மனைவியும் ரவி மேரிமெக்ஷிமாலா, டக்கிளஸ் மேரிநிக்ஸலா(கனடா), வின்ஸலோஸ் ஜோன் (பிரான்ஸ்), வின்சலோஸ் அன்டனி ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (10.08.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல. 6, சென்.ஜேம்ஸ் மேற்கு,*
*குருநகர், யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**பற்றிக் வின்சலோஸ்** *(கணவர்.)*

## நடராஜா சண்முகராஜா

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட நடராஜா சண்முகராஜா நேற்று (09.08.2006) புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீ.எஸ் நடராஜா (சட்டத்தரணி) - சிவகாமசுந்தரி தம்பதியரின் அன்பு மகனும் காயத்திரிதேவியின் அன்புக் கணவரும் மீனலோஜினி (லண்டன்), ராஜேஸ்வரி, காலஞ்சென்ற சிவராஜா மற்றும் சூரியகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கதிரவேலு - அன்னலட்சுமி தம்பதியரின் மருமகனும் இராமச்சந்திரன், சாவித்திரிதேவி, மங்களேஸ்வரி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.08.2006) வியாழக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பூதர்மடம்,*
*கோப்பாய்.*

*தகவல்:-*
**காயத்திரிதேவி** *(மனைவி)*

கருத்தரங்கு வினாத்தாள்
கொழும்பு பிரபல ஆசிரியர் S.உதயச்சந்திரனின் தரம் 5 புலமைப்பரிசில் இறுதிக் கருத்தரங்கு வினாத்தாளும், குறிப்பும் பெற்றுக் கொள்ளலாம்.
(பதிவு செய்தோர் உடன் வரவும்)
கற்சுமி, நாவலர் வீதி, யாழ்.
T.P: 077 6510149




கணனி வடிவமைப்புத் துறையில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ளவர்கள் பணியாற்றுவதற்கு சிறந்ததொரு சந்தர்ப்பம். கொழும்பில் அல்லது யாழ்ப்பாணத்தில் பணியாற்றுவதற்கான வாய்ப்பு.
Page maker, Photo shop and Corel draw ஆகிய மென்பொருள்களைக் கையாண்டு வடிவமைப்பை மேற்கொள்ளும் தகுதியான ஆண்களுக்கு உடனடி வேலை.
10.08.2006 வியாழக்கிழமை நேரில் வரவும். கொழும்பில் பணியாற்ற விரும்புபவர்களில் தேவையானோருக்கு தங்குமிட வசதி அளிக்கப்படும்
உதயன் மனிதவளசேவை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனத்தில் கணனித் தட்டெழுத்தாளர் பயிற்சிக்கு ஆண்கள் தேவை. கணனி பற்றிய அறிவு மட்டுமே போதுமானது. தகுதியானவர்கள் 10.08.2006 அன்று காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்.
தேவையானவர்களுக்கு கொழும்பில் தங்குமிட வசதி வழங்கப்படும்.
உதயன் மனிதவள சேவை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.08.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org